பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 01 வெள்ளிக்கிழமை (16-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:355

## மட்டுநகர் அதிர்ந்தது!

# தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இராணுவ உளவுப் பிரிவினர் மூவர் பலி!

## படையினரின் பாதுகாப்பு மையத்தில் நேற்றுக் காலை துணிகரப் பாய்ச்சல்

மட்டக்களப்பு,நவம்பர்16

**மட்டக்களப்பு நகரின் மத்தியில் - இராணுவத்தினரின் பாதுகாப்பு மையத்தில் - நேற்றுக் காலை 10.45 மணியளவில் நடத்தப்பட்ட பெரும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலினால் நகரமே அதிர்ந்தது; இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் மூவர் கொல்லப்பட்டனர். மற்றொரு உளவுப் பிரிவு நபர் உட்பட எட்டுப் பேர் படுகாயமடைந்தனர்.**

நகரின் மையப் பகுதியில் - புளியந்தீவில் - ஸ்ரீபால கட்டடத் தொகுதியில் இராணுவ புலனாய்வுப் பிரிவு அலுவலகம் இயங்கி வருகின்றது. அதற்கு அருகில்தான் 233 ஆவது பிரிகேட் படைப் பிரிவின் தலைமையகம், விசேட அதிரடிப்படையணித் தலைமை அலுவலகம், தமிழ்க் குழுக்களின் அலுவலகங்கள் ஆகியன அமைந்துள்ளன.

இவற்றுக்கு அண்மையில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகிலேயே நேற்றுக்காலை தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

இந்தத் தாக்குதலினால் மட்டக்களப்பு நகரில் பெரும் பதற்ற-நிலை உருவானது; கடைகள் இழுத்து மூடப்பட்டன; போக்குவரத்துகளும் குறைந்தன; நகர் ஸ்தம்பித்தது.

படையினருடன் இணைந்து செயற்படும் முன்னாள் தமிழ் இயக்கங்களின் உறுப்பினர்களான இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே ஸ்ரீபால கட்டடத்தில் தங்கியுள்ளனர்.

இவர்களில் சிலர் அக்கட்டடத்துக்கு அருகில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு நெருக்கமாக - சந்தியில் - கதைத்துக் கொண்டிருந்த போது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மிக முக்கிய நபர்களே தாக்குதலில் உயிரிழப்பு

மட்டக்களப்பு,நவ.16

மட்டக்களப்பு நகரில் அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் நேற்றுக் காலை நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இராணுவ உளவுப் பிரிவைச் சேர்ந்த மிக முக்கிய நபர்களே கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கோப்ரல்களான நிதி (சுப்பிரமணியம் மகேஸ்வரன் - வயது 28), ரமேஷ் (செல்லையா இரவிச்சந்திரன் - வயது 30), டுவோரா (மகாலிங்கம் சந்திரகுமார் - வயது 26) ஆகியோரே பலியாகியுள்ளனர்.

இவர்களில் நிதியும் டுவோராவும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்; ரமேஷ் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார்.

இவர்களின் குழுவைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் வினோபா (தம்பி) என்பவர் இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தார்.

இவர்களில் ரமேஷ், நிதி, தம்பி ஆகியோர் 1992 வரை புளொட் அமைப்பில் இயங்கியவர்கள். பின்னர் புளொட் அமைப்பை விட்டு வெளியேறி இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைந்து செயற்பட்டு வந்தனர்.

இந்த அணியினர் 'மோகன் குழு' என்று அழைக்கப்பட்டனர்.

காயமடைந்த வினோபா (தம்பி) மேற்படி மோகன் குழுவின் தலைவரான மோகனின் தம்பியாவார். அவரின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுத் தாக்குதலின் பின் மூன்று குண்டுகள் மீட்பு!

மட்டக்களப்பு,நவ.16

மட்டக்களப்பு நகரத்தின் மையத்தில் - அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் நேற்றுக் காலை தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் அப்பகுதியில் இருந்து மூன்று குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

தற்கொலைக் குண்டு வெடித்து சற்றுநேரத்தில் ஒரு குண்டும் -

சுமார் இரண்டு மணி நேரம் கழித்து ஒரு குண்டும் -

மாலையில் ஒரு குண்டுமாக மொத்தம் மூன்று குண்டுகள் மீட்கப்பட்டன.

இவற்றுள் ஒன்று ஓட்டோவில் இருந்தும் -

மற்றொன்று சைக்கிளில் பொருதப்பட்ட நிலையிலும் - கண்டுபிடிக்கப்பட்டன.

குண்டுகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஓட்டோ சாரதியான ஜோசப என்பவரைப் புலனாய்வுப் பிரிவினர் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகின்றார்கள்.

சம்பவம் நடைபெறுவதற்கு சற்று முன்னர் இளைஞர் ஒருவர் பொதி ஒன்றைக் கொண்டுவந்து இந்த ஓட்டோ சாரதியிடம் கொடுத்து விட்டு கடைக்குப் போய் வருவதாகக் கூறிச் சென்றதாகவும் -

குண்டு வெடிப்பை அடுத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரு முஸ்லிம் இளைஞர்கள் ஏறாவூரில் சுட்டுக் கொலை!

கொழும்பு,நவ.16

ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த இரு முஸ்லிம் இளைஞர்கள் நேற்று இரவு அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஏறாவூர் ரிபைல் பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த எஸ்.லெப்பை நியாஸ் (வயது 18), ஐயன்கேணி, இப்ரா வீதியைச் சேர்ந்த எஸ்.லத்தீப் இர்ஷான் (வயது 17) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

மட்டக்களப்புக்கு வடமேற்கே 12 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நாச்சிநகரில் வைத்தே இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கந்தளாயில் 2 சிப்பாய்கள் பலி

கொழும்பு,நவ.16

திருகோணமலை மாவட்டம் கந்தளாய் - அல்லை வீதியில், துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்றுக்காலை மறைந்திருந்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

திருகோணமலைக்கு தெற்கே 31 மைலுக்கு அப்பால் சோமபுரப் பகுதியில் பன்ஸெல்கொடல்லவுக்கும் மீகஸ்கொடல்லவுக்கும் இடையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த மேலதிக படையினர் அங்கு தேடுதலில் ஈடுபட்டனர். (உ)

## வடக்கு - கிழக்கில் உடனடியாக 2ஆயிரம் ஆசிரியர்கள் நியமனம்!

### அமைச்சரவை நேற்று முடிவு

கொழும்பு,நவ.16

வடக்கு - கிழக்கில் இரண்டாயிரம் ஆசிரியர்களை உடன் நியமிப்பது என்று அமைச்சரவை முடிவு செய்திருக்கின்றது.

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

மக்களின் வாழ்வியல் நடவடிக்கைகளை சீராக்குவது தொடர்பாக அமைச்சர்கள் சமர்ப்பித்த 30 யோசனைகளை அமைச்சரவை ஏற்று அங்கீகரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அங்கீகரிக்கப்பட்ட யோசனைகளில் சில வருமாறு:-

★ வடக்கு - கிழக்கில் இரண்டாயிரம் ஆசிரியர்கள் உடன் நியமிக்கப்படுவர். பட்டதாரிகள் ஆயிரம் பேருக்கும, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆயிரம் பேருக்கும் நியமனம் வழங்கப்படும்.

★ சமுர்த்திக் கொடுப்பனவுகள் ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்படும். தற்போது 250 ரூபா தொடக்கம் ஆயிரம் ரூபா வரை உள்ள இந்தக் கொடுப்பனவு, இனி 500 ரூபா முதல் ஆயிரத்து இருநூறு ரூபா வரையாக இருக்கும்.

★ சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு ஏழரைவீத வட்டியுடன் பத்தாயிரம் ரூபா வரை கடன் வழங்கப்படும். (உ-10)

### சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்தத் தடை

லண்டன்,நவ.16

சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்தும் நடைமுறையைத் தடைசெய்யும் சர்வதேச உடன்படிக்கை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி - இன்னும் மூன்று மாதங்களில் - நடைமுறைக்கு வருவதாக ஐ.நா. அறிவித்திருக்கின்றது.

இந்த உடன்படிக்கை -

ஆயுதப் பிணக்குகளில் அல்லது படையில் கட்டாயமாகவோ, சுயவிருப்பின் பேரிலோ 18 வயதுக்கு உட்பட்டோரை ஈடுபடுத்துவதைத் தடைசெய்கின்றது.

இந்த உடன்படிக்கையில் இதுவரை எண்பத்தேழு நாடுகள் ஒப்பமிட்டு, அதனை ஏற்றுக்கொண்டுள்ளன.

தற்போது நாற்பது நாடுகளில் சுமார் மூன்று லட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள் யுத்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (உ)

## மருதமுனையில் கடத்தப்பட்ட வேட்பாளர்கள் இருவரும் இன்னும் விடுவிக்கப்படவில்லை

அம்பாறை,நவ.16

அம்பாறை, மருதமுனைப் பகுதியில் வைத்து கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்ட இரண்டு வேட்பாளர்களும் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இவர்களுடன் கடத்திச் செல்லப்பட்ட ஏனைய மூவரும் விடுதலை செய்யப்பட்டபோதும் இவர்கள் இருவரும் விடுவிக்கப்படாமையால் அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் பிரசாரங்கள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இவர்கள் கடத்திச் செல்லப்பட்டமை தொடர்பாக ஐ.தே.கட்சியோ அல்லது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸோ கண்டனம் எதுவும் தெரிவிக்காததையிட்டு விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் ஒரு கட்சியின் வேட்பாளரே இக்கடத்தலின் பின்னணியில் இருப்பதாகப் பொதுவாகக் குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது. (உ-10)



தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக மட்டுமல்ல - சமூகத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் விடிவுக்காகவும் போராடும் ஒரு தமிழ் மகன்

மாவை.சோ.சேனாதிராசா அவர்களே

05-12-2001 தேர்தல்

எங்கள் தெரிவு இல. 12 X 12



(C/19264)

# பிரபாகரனின் புலிப்படையில் இப்போது சிங்களவர்களும்!

## ஜனாதிபதி குமாரதுங்க கூறுகின்றார்

கொழும்பு,நவ.16

"பிரபாகரனின் புலிகள் படையில் இப்போது சிங்களவர்களும் இருக்கின்றார்கள்."

- இப்படிக் கூறுயிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஜனாதிபதி மாளிகையில் கடந்த புதனன்று தொழிற் சங்கத் தலைவர்கள் மற்றும் செயலாற்று உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் அவர் உரையாற்றிய போதே இப்படிக் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

"என்னையும், மேஜர் ஜெனரல் அல்கமவையும் கொல்ல புலிகள் இயக்கத் தற்கொலை குண்டுதாரியை அழைத்து வந்தவர் ஒரு சிங்களவரே. திவுலப்பிட்டியைச் சேர்ந்த குமாரசிங்க என்னும் அவர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர். இந்தத் தகவல்கள் இப்பொழுது வெளிவந்துள்ளன.

"பிரபாகரனின் கொலைகாரப் படையில் இதுவரை சிங்களவர்கள் இருக்கவில்லை. இப்பொழுது சிங்களவர்களும் அதில் சேர்ந்துவிட்டார்கள். போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவோரின் உதவியும் புலிகள் இயககத்துக்குக் கிடைக்கின்றது.

என்மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் இரு சிங்களவர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதை பொலீஸார் இப்பொழுது கண்டுபிடித்துள்ளனர். போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவோரின் பின்னால புலிகள் இயக்கம் இருந்து வருகிறது.

"ஐ.தே.க. ஆட்சியில் நிலவிய பயங்கரநிலை நாட்டில் மீண்டும் ஏற்படாதிருக்க பொ.ஐ.முன்னணியின எம்பிக்கள் 130பேரைக் கொண்ட அரசு ஏற்பட செயலாற்றுங்கள்." - என்றார் ஜனாதிபதி. (உ)

# தேர்தல் வன்முறைகளில் புதனன்று இருவர் மரணம்

கொழும்பு,நவ.16

நீர்கொழும்பில் கடந்த புதன்கிழமை ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட கூட்டத்தில் இடம்பெற்ற கைகலப்பில், காயமடைந்து நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஐ.தே.கட்சி ஆதரவாளரான நொச்சல் என்பவர் அன்றிரவு ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இவரது மரணம் தொடர்பாக வாகனச் சாரதி ஒருவர் பொலீஸில் சரணடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் பலர் தேடப்பட்டு வருவதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில் -

பெபியத்தை வீரக்கெட்டியில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளரான அமரசேன என்பவர் கடநத புதனன்று இரவு தனது வீட்டு முற்றத்தில் இருந்த போது இனந்தெரியாத நபர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

இதற்கிடையில் -

தேர்தல் வன்முறைச்சம்பவங்களின் மொத்த எண்ணிக்கை 755 ஆக உயர்ந்துள்ளது. (உ)

## குண்டு வெடிப்பில் இளைஞன் காயம்

கொழும்பு,நவ.16

ஏறாவூர் நான்காம் குறிச்சியில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இளைஞன் ஒருவன காயமடைந்தான்.

இந்த இளைஞன் தாம் கண்டெடுத்த குண்டு ஒன்றைத் தட்டிப்பார்த்த சமயம் அது வெடித்ததாகக் கூறப்படுகிறது.

தவநாதன் என்ற இந்த இளைஞன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளான். (உ)

# அரசியல் வன்முறைகளுக்கு எதிராக மட்டக்களப்பில் இன்று ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,நவ.16

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் அரசியல் வன்முறைகளுக்கெதிராக அங்கு இன்று காலை வெகுஜன ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி முதன்மை வேட்பாளர் அலிசாகிர் மௌலானா இத் தகவலைத் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் யூ.ஏ.மர்சூக், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சசிதரன் ஆகியோர் மீதான தாக்குதல்கள் உட்பட பல்வேறு அரசியல் வன்முறைகளுக்கெதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவதாக அவர் கூறினார்.

இதற்கிடையில் -

ஜனாப பேரியல் அஷ்ரப்பின் தேசிய ஐக்கிய முன்னணி வேட்பாளர் எம்எஸ். முகம்மது தம்பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டுள்ளதாகவும் -

அவரது வாகனம் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் -

ஒரு செய்தி தெரிவித்தது.

அதேசமயம் -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் காத்தான் குடிப்பகுதியில் நேற்றுமுன்தினம் தனது தேர்தல் பிரசாரவுரையை நிகழ்த்திக் கொண்டிருந்த வேளையில் மேடையை நோக்கி கற்கள் வீசப்பட்டுள்ளன; கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. இதனால் அவர் தனதுரையை இடையில் நிறுத்த வேண்டிய நிலை உருவானது.

அங்கு நின்ற படையினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து, அவரைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர் என்று கூறப்பட்டது.

காத்தான் குடியில் உள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அலுவலகமும இனந்தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# ஓட்டமாவடியில் பொலீஸார் மீது பிஸ்டல் குழுவினர் தாக்குதல்

## ஒருவர் பலி; ஒருவர்காயம்

செங்கலடி,நவ.16

ஓட்டமாவடி மாவடிச்சேனையில் நேற்றுக் காலை பொலீஸார் மீது இனம் தெரியாத பிஸ்டல் குழுவினர் தாக்குதல் நடத்தினர். அதில் ஒரு பொலீஸ்காரர் உயிரிழந்தார்; மற்றுமொருவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் ஓட்டமாவடியைச் சேர்ந்த உமர்லெப்பை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பொலன்னறுவை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

உயிரிழந்த பொலீஸ்காரரின் சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இரவு நேர காவல் கடமையை முடித்து வீட்டுத் திரும்பிய பொலீஸார் மீதே இத் தாக்குதல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## திருமலையில இன்று பஸ் ஊழியர்கள் மறியல் போர்!

திருகோணமலை,நவ.16

திருகோணமலை மாவட்டத்தில் அரச போக்குவரத்துச் சேவையான 'நியூ ஈஸ்டேர்ன் பஸ் கொம்பனி' நிறுவன ஊழியர்கள் இன்று காலை சுமார் மூன்று மணிநேரம் அடையாள மறியல் போராட்டத்தில் ஈடுபடவிருக்கின்றனர். இதனால் திருமலையில் இன்று பஸ் சேவைகள் சுமார் மூன்று மணி நேரம் ஸ்தம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி நிறுவனப் பொது முகாமையாளர் ஆர்.யோகேந்திரா கட்டாய லீவில் அனுப்பப்பட்டதை ஆட்சேபித்தே ஊழியர்கள் இன்று மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-145)

# 880 புலிகளைக் கொன்றவர் பாதுகாப்புக் கோருகின்றார்!

## அதற்காக உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு,நவ.16

880 விடுதலைப் புலிகளைத தான கொன்றதாகக் கூறிக்கொள்ளும் முன்னாள் இராணுவ அதிகாரியும், முன்னாள் பிரதி சபாநாயகருமான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க, இராணுவத் தளபதிக்கு எதிராகவும், தமக்குப் பாதுகாப்பு வழங்கும்படி உத்தரவிடக் கோரியும் நேற்று உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல்செய்தார்.

தமக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுவிட்டது என்றும -

புலிகளின் அச்சுறுத்தல் தமக்கு இருப்பதால், முன்னர் இருந்த பாதுகாப்பை இப்போதும் தமக்குத் தர வேண்டும் என்றும் -

மனுவில் அவர் கோரியிருக்கின்றார்.

இராணுவத்திலிருந்து ஓய்வு பெறும உயர் அதிகாரிகளுக்கு பாதுகாப்புக் கருதி ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட 11 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வழங்கப்படுவது வழக்கம் எனவும் அவர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனார்.

## ஐ.தே.க. அலுவலகம் நேற்றுச் சோதனை

கொழும்பு,நவ.16

பம்பலப்பிட்டியில் உள்ள ஐ.தே. கட்சியின் இணைப்பு அலுவலகம் நேற்றுப் பிற்பகல் பொலீஸாரால் சோதனையிடப்பட்டுள்ளது.

இது அத்துமீறிய செயல் எனவும் -

இதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் இன்று வழக்குத் தொடரப் போவதாகவும் -

ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

## மட்டக்களப்பில் கிரனேட் வீச்சு!

மட்டக்களப்பு,நவ.16

மட்டக்களப்பு பிரதான பொலீஸ் நிலையத்திலிருந்து சுமார் நூறு மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள - கோட்டைமுனை, திருமலை வீதி பொலீஸ் சோதனைச் சாவடிமீது நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் புலிகள் கிரனேட் வீச்சுத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ரட்ணாயக்கா (வயது28) எனபவர் காயமடைந்தார். இவர் மட்டக்களப்பு போதனா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ)

# பெருங்குடி மக்களின் சாதனையோ சாதனை!

கொழும்பு,நவ.16

கடந்த ஆறு ஆண்டுகளில் இலங்கையர்கள் 677 கோடி போத்தல மதுபானத்தை அருந்தியிருக்கிறார்கள்.

புள்ளிவிவரங்களை மேற்கோள் காட்டி அண்மைய கணிப்பொன்று இப்படித் தகவல் வெளியிட்டிருக்கின்றது.

இதற்கென மொத்தம் 22 ஆயிரத்து 870 கோடி ரூபா செலவு செய்யப்பட்டிருக்கிறது என்ற மது ஒழிப்பு இயக்கத்தின் பேச்சாளர் ஜிரணதுங்க தெரிவித்தார்.

சாராயம், பியர், பிரண்டி, கள்ளு, ஜின், விஸ்கி உட்பட சட்ட விரோதமாக்கப்பட்டுள்ள கசிப்பு என்ற மது பானமும் இவற்றுள் அடங்கும். (உ)

## றெஜி ரணதுங்கவுக்கு பிணை மறுப்பு

கொழும்பு,நவ.16

ஐ.தே.கட்சியின் ஆதரவாளர் ஒருவர் கொலை தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் றெஜி ரணதுங்கவை பிணையில் விடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை கம்பஹா நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

றெஜி ரணதுங்கவுக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 20ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (உ)


வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**

நடத்தும்

யாழ். மாவட்ட

"மூத்த கலைஞர் கௌரவம்" - 2001

**அழைப்பு**

இடம்:

நல்லூர் துர்க்கா மணிமண்டபம்

காலம்:

18.11.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

தலைமை:

திரு.து.வைத்திலிங்கம்

(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)

பிரதம விருந்தினர்:

திரு.வே.இரகுநாதன்

(செயலாளர், வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு)

சிறப்பு விருந்தினர்கள்:

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

கலாபூஷணம், சாகித்திய சிரோன்மணி, இணுவில்

இசைப்பேரரசு ந.வீரமணி ஐயர்

நிகழ்ச்சி நிரல்

காலை 9.30 மணி :- கலைஞர்கள் மங்கள வாத்தியங்கள் சகிதம் நல்லூர் ஆலய முன்றிலில் இருந்து துர்க்கா மணிமண்டபம் வரை ஊர்வலமாக அழைத்துவரல்.

10.00 மணி:- மங்கள விளக்கேற்றல்

10.10 மணி:- இறைவணக்கம்
திருமதி ஞா.சிவநேசன்
(ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்)

10.15 மணி :- வரவேற்புரை
திரு.எஸ்.தெய்வநாயகம்
(உதவிப் பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)

10.25 மணி :- தலைமையுரை
திரு.து.வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)

10.40 மணி:- மூத்த கலைஞர் கௌரவம்

12.30 மணி :- சிறப்பு விருந்தினர்கள் உரை

01.00 மணி:- பிரதம விருந்தினர் உரை

01.15 மணி :- பதிலுரை
கலைஞர்கள் சார்பில் கலாபூஷணம்
திரு.எஸ்.கணபதிப்பிள்ளை

01.30 மணி :- நன்றியுரை

பலதரப்பட்ட கலைத்துறையில் தங்களை அர்ப்பணித்து சேவையாற்றிய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 80 கலைஞர்களுக்கு பாராட்டும் கௌரவமும் அளிக்கப்படும். இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்,
பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

248,1/1, காலி வீதி,
கொழும்பு - 04.

(C/19321)

# பின்லேடன் எங்குள்ளார்? தேடும் முயற்சி தீவிரம்!

## தப்பிச் செல்லும் வழிகள் அடைப்பு



காபூல்,நவம்பர்16

**தலிபான்களின் வலுக் கோட்டையான கந்தகார் நகரம் மீது நெருக்குதல்கள அதிகரித்துவருவதையடுத்து அந்த நகரைச் சூழ்ந்துள்ள மலைக் குகைகளில் ஒழிந்துள்ளதாக நம்பப்படும் தீவிரவாதி, ஒஸாமா பின்லேடன் அங்கிருந்து தப்பிச்செல்ல முயற்சிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

**ஆப்கானிஸ்தானை விட்டு வெளியே அவர் தப்பிச் செல்லக்கூடிய வழிகளை அடைத்துவிடும் முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஒஸாமா பின்லேடன் இன்னமும் ஆப்கானிஸ்தானுக்குள் தங்கியிருப்பதாகவே தலிபான்கள் கூறியுள்ள போதிலும் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லும் உபாயங்களை அவர் நாடியிருக்கலாம் என்று அமெரிக்கா சந்தேகிக்கிறது.

ஒஸாமா பின்லேடனைத் தேடிப் பிடிக்கும் முயற்சிகளை அமெரிக்கத் தரைத் துருப்புகள் பெரும் எடுப்பில் ஆரம்பித்திருக்கின்றன. அவர் பாகிஸ்தானுக்குள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காகத் தனது எல்லையில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பின்லேடனின் மறைவிடங்களெனச் சந்தேகிக்கப்படும் 4 பிரதேசங்கள் அமெரிக்கப் பாதுகாப்பு நிபுணர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவை வருமாறு:-

☆ ஜலலாபாத் நகர் - கடைசியாக பாகிஸ்தானியப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் இந்த நகரிலேயே பின்லேடனைச் சந்தித்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

☆ கோஸ்ட் பகுதி(Khost)- பின்லேடனின் வீடியோப் படம் ஒன்றில் காணப்படும் மலைத் தொடர்கள் இந்தப் பகுதிக்குரியவை என்பதை புவியியலாளர்கள் உறுதிசெய்துள்ளனர்.

☆ கந்தகார்:- இங்குள்ள தலிபான்களின் கோட்டைக்கு அருகே நிலக்கீழ் அறைகளில் பின்லேடன் ஒளிந்திருக்கலாம் என்று அமெரிக்க, பிரிட்டிஷ் அதிகாரிகள் நம்புகின்றனர்.

☆ ஒருகன் மாகாணம் (Oruzgan)- மலைகளால் சூழப்பட்ட இந்த மாகாணத்தில் மலை இடுக்குகளுக்கு இடையே, ஒன்றுடன் ஒன்று வலைப் பின்னல் போன்று தொடர்புடைய குகைகளில் பின்லேடன் ஒளிந்திருக்க அதிக வாய்ப்பு.

குகைகளுக்குக் குகை மாறிமாறி ஒளிந்திருக்க வாய்ப்புள்ளதால் அத்தகைய மலைக் குகைகளை இலக்கு வைத்துத் தேடுதல் நடத்தப் பெரும் எண்ணிக்கையில் தனது தரைத் துருப்புகளைப் பணியில் ஈடுபடுத்துவதென அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இந்தத் தேடுதல் இலகுவான பணியாக இருக்கப்போவதில்லை என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடக்குக் கூட்டணிப் படையினர் மற்றும் அண்மையில் காபூலில் சிறைபிடிக்கப்பட்ட தலிபான் போராளிகள் ஆகியோரைப் பயன்படுத்தித் தீவிர வேவுப்பணிகளை மேற்கொண்டால் மட்டுமே பின்லேடனின் நடமாட்டம் குறித்து ஏதேனும் தகவல்களை அமெரிக்கப்படைகள் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

(ஐ)

உலக அரங்கில்

## 'அமெரிக்கர்கள் என்னைக் கொல்வது உறுதி'

இஸ்லாமாபாத்,நவ.16

அமெரிக்கர்கள் தன்னை எப்படியாவது கொன்று விடுவார்கள் என்று பின்லேடன் நம்புவதாக பாகிஸ்தானின் பிரபல பத்திரிகையாளர் ஹமிட்மிர் தெரிவித்துள்ளார்.

இவர் அண்மையில் காபூல் நகருக்கு அருகே மறைவிடம் ஒன்றில் பின்லேடனைச் சந்தித்திருந்தது தெரிந்ததே.

"அமெரிக்கர்கள் என்னைக் கொன்று விடுவார்கள். நான் சாகத் தயாராகவே இருக்கிறேன்" என்று பின்லேடன் தன்னிடம் கூறியதாக அவர் சொல்கிறார்.

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட பேரழிவுத் தாக்குதல், அதன் பின்னர் ஆப்கான் மீது அமெரிக்கா தொடுத்த போர் ஆகியவற்றின் பின்னர் பின்லேடனை நேரில் சந்தித்த பத்திரிகையாளர் இவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



இந்திய சினிமா நட்சத்திரங்களின் படங்களைப் பார்த்து ரசிக்கும் காபூல் இளைஞர் கூட்டம். தலிபான் ஆட்சியில் அங்கு சினிமாப் படங்கள் பார்ப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டிருந்தது.

# பின்லேடனின் அடுத்த புகலிடம் எந்த நாடு?

லண்டன்,நவ.15

ஆப்கானிஸ்தானின் போர் நிலைவரங்களில் பெரும் திருப்பங்கள் நிகழ்ந்திருப்பதை அடுத்து இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் அங்கிருந்து தப்பிச்சென்றிருக்கலாம் என்று பல ஊகங்கள் கிளம்பியிருக்கின்றன.

பின்லேடன் ரஷ்யக்குடியரசான செச்சினியாவுக்குச் சென்றுவிட்டதாக ஏற்கனவே தகவல்கள் அடிபடுகின்றன. இந்தோனேசியாவின் லம்போக் (Lombok) தீவில் அவர் தலைமறைவாகிவிட்டதாக இன்னுமொரு தகவல். சோமாலியா, ஈராக், சூடான் ஆகிய நாடுகளில் ஏதேனும் ஒன்றுக்கு தனது குடும்பத்துடன் பின்லேடன் தப்பிப் போய்விடக் கூடும் என்று சிலர் கூறுகின்றனர்.

அயலில் உள்ள பாகிஸ்தானுக்குள் மாறுவேடத்தில் நுழைந்து விட்டால்அவரைக் கண்டுபிடிப்பது இலகுவல்ல என்று ஒருசாரார் தெரிவிக்கின்றனர். ஆனால் இந்த இஸ்லாமியத் தீவிரவாதியின் கடைசி புகலிடம் மரணம்தான் என்கிறது அமெரிக்கா.

பின்லேடனின் கதியை அறிய உலகம் ஆவலுடன் இருப்பது மட்டும் உண்மை. (ஐ)



காபூல் நகரில் எலக்ரோனிக் உபகரணங்களை விற்பனை செய்யும் கடை ஒன்றில் இருந்து வீடியோ சாதனத்தை வாங்கிச் செல்லும் ஒருவரைப் படத்தில் காணலாம். தலிபான் ஆட்சியின் போது வானொலி மற்றும் தொலைக்காட்சி என்பன தடைசெய்யப்பட்டிருந்தன. (ஐ)

# 8 வெளிநாட்டுப் பிரஜைகளையும் தலிபான்கள் விடுதலை செய்தனர்

இஸ்லாமாபாத், நவ.16

ஆப்கானிஸ்தானில் கிறீஸ்தவ மதத்தைப் பரப்ப முயன்றதாகத் தெரிவித்து தலிபான்களால் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் எட்டுப் பேரும் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

இரண்டு அமெரிக்கப் பிரஜைகள், இரு அவுஸ்திரேலியப் பிரஜைகள மற்றும் நான்கு ஜேர்மன் நாட்டவர்கள ஆகியோரே கடந்த மூன்று மாதகாலமாக தலிபான்களால் கைதிகளாகச் சிறைப்பிடித்து வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்தவாரம் தலிபான்படைகள் காபூல் நகரைக் கைவிட்டு வெளியேறிய சமயம் இவர்கள் எண்மரையும் தம்மோடு கந்தகார் நகரத்துக்குக் கொண்டு சென்றிருந்தனர்.

'ஜேர்மன் கிறிஸ்ரியன் சர்டி' என்னும் தொண்டு நிறுவனத்துக்காகப் பணியாற்றிய இவர்கள், ஆப்கானிஸ்தானில் கிறிஸ்தவ மத பிரசாரங்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டிய தலிபான்கள் அவர்களைக் கைது செய்து விசாரணைக் குட்படுத்தியிருந்தனர். இவர்களோடுசேர்த்துக் கைது செய்யப்பட்ட வேறு 16 உள்ளூர் தொண்டர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் எண்மரையும் தலிபான்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக விடுவித்தனர்.

நல்ல தேக ஆரோக்கியத்துடன் காணப்பட்ட அவர்கள் பின்னர் அமெரிக்காவின் மூன்று விசேட ஹெலிக்கொப்டர்கள் மூலம் பாகிஸ்தானில் உள்ள சக்லாலா இராணுவ விமானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.



உயிருடன் திரும்புவார்களா என்ற பலமான சந்தேகங்களின் மத்தியில் இந்த வெளிநாட்டுப் பிரஜைகளைத் தலிபான்கள் விடுவித்திருப்பது பலருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது.

இவர்கள் விடுதலையான செய்தி வெளியானதும் அவர்களது சொந்த நாடுகளில் உறவினர்கள் ஆரவாரம் செய்து குதூகலித்தனர்.

கைதிகளின் விடுதலை தொடர்பாக எந்தவித சமரசப் பேச்சுக்களும் இடம்பெறவில்லை என்று அமெரிக்க ராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

'இது ஒரு நம்பமுடியாத நல்ல செய்தி' என்று அமரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

விடுவிக்கப்பட்ட வெளிநாட்டவரின் பெயர் விவரம்:-

ஹெதர் மேசர்(அமெரிக்கா), டானா ஹறி(அமெரிக்கா), மார்க்கிறிட ஸ்ரெப்னர்(ஜேர்மனி), ஜோர்ஜ் ரேப்மன்(ஜேர்மனி), கற்றி ஜெலிநெக் (ஜேர்மனி), சில்க்கி டெர் ஹொப் (ஜேர்மனி), பீற்றர் புஞ்(ஆஸ்திரேலியா), டயானா தோமஸ் (ஆஸ்திரேலியா)

## காபூலில் அணு ஆயுதம் தயாரிக்கும் வீடு?

லண்டன்,நவ.16

அணு ஆயுதங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்ததாக நம்பப்படும் வீடு ஒன்று காபூல் நகரில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக 'டைம்ஸ்' பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஒஸாமா பின்லேடனின் அல் - கெய்டா அமைப்பினரால் கைவிடப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் அந்த வீட்டில் பாதி எரிந்த நிலையில் குண்டு தயாரிக்கும் கருவிகளும் அணு மற்றும உயிரியல் ஆயுதங்களைத் தயாரிப்பது தொடர்பான விளக்கங்கள் அடங்கிய குறிப்புப் புத்தகங்களும் காணப்பட்டதாக 'டைம்ஸ்' தெரிவித்தது. இந்தத் தடயங்கள் மேற்குலக போர் முறை சார்ந்தவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இடைக்கால நிர்வாக அரசை ஆதரிக்கப் போவதில்லை!

## தலிபான் தலைவர் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

இஸ்லாமாபாத்,நவ.16

ஆப்கானிஸ்தானில் விரிவான இடைக்கால அரசை அமைப்பதற்குத் தாங்கள் எந்த வகையிலும் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என்று தலிபான் தலைவர் முல்லா முஹமட் ஓமர் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

பி.பி.ஸியின் பஸ்தூன் மொழி சேவைக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்ததாக பி.பி.ஸி. இணையத்தளம் தகவல் வெளியிட்டிருக்கிறது.

தெற்கு நகரான கந்தகார், தொடர்ந்தும் தலிபான்களின் முழுக் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஐநாவின் ஆதரவுடன் ஆப்கானிஸ்தானில் அமையவுள்ள விரிவான இடைக்கால அரசை 'பிசாசுகளின் அரசாங்கம்' என்று ஓமர் வர்ணித்திருக்கிறார். (ஐ)

# சிவிலியன்களின் உயிரிழப்பை தவிர்க்கவே பின்வாங்கினோம்!

## தலிபான் பேச்சாளர் தெரிவிப்பு

கந்தகார்,நவ.16

தலிபான் தலைவர் முல்லா முஹமட் ஒமரும், ஒஸாமா பின்லேடனும் பாதுகாப்புடனும் நல்ல தேக ஆரோக்கியத்துடனும் ஆப்கானிஸ்தானிலேயே தங்கியுள்ளனர்.

தலிபானின் பேச்சாளர் முஹமட் தயாப் அஹ்கா இவ்வாறு கூறியிருக்கிறார்.

தென்மேற்கு ஆப்கானிஸ்தானில் கந்தகார் நகரின் மீதான தலிபான்களின் பிடி தளர்ந்து வருவதாகக் கூறப்படுவதையும் அவர் மறுத்துள்ளார்.

அங்கு தலிபான் படைகள் முழுப்பலத்துடன் திருப்பித் தாக்கத் தயாரான நிலையில் இருப்பதாக அவர் கூறினார்.

தற்போது வடக்குக் கூட்டணியின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ள நகரங்களில் இருந்து தலிபான்கள் வெளியேறியது அவர்களுக்கு விடுக்கப்பட்ட உத்தரவுக்கு அமையவே என்று கூறிய முஹமட் தயாப், "சிவிலியன்களின் உயிரிழப்பைத் தடுக்கவே" அவ்வாறு உத்தரவிடப்பட்டதாகவும் தெரிவித்தார்.

"இது ஒரு தந்திரோபாயப் பின்வாங்கல். இழந்த பகுதிகளை மீண்டும கைப்பற்ற நாங்கள் முயன்றுவருகிறோம்" என்றும் தலிபான் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

# பலாலி படைமுகாம் சூழல் பகுதிகளில் 50ஆயிரம் பனம்விதைகள் நடத்திட்டம்

## பனை அபிவிருத்திச் சபையை நாடியுள்ளார் இராணுவ அதிகாரி

யாழ்ப்பாணம், நவ.16

பலாலி இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் 50 ஆயிரம் பனம் விதைகளை நடுவதற்கு பலாலி இராணுவத் தலைமையகம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்குரிய பனம் விதைகளைத் தமக்குத் தந்துதவுமாறு பலாலி படைப் பிரிவு அதிகாரி கப்டன் வியனகே யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் குடாநாட்டில் பனைமரங்கள் பல அழிந்துவிட்டதாகவும்-

இவ்வாறு பனைகள் அழிந்துபோவதற்கு இராணுவத்தினரும் ஒரு வகையில் காரணமாக இருந்துள்ளனர் எனவும்-

அவ்வாறு இழந்த பனைகளை ஈடுசெய்வதற்காகவே இந்த நடுகைத் திட்டத்தைத் தாம் முன்னெடுப்பதாகவும் பனை அபிவிருத்திச் சபையின் முகாமையாளரிடம் படை அதிகாரி கூறியிருக்கிறார்.

இந்தப் பனம் விதைகளைப் பலாலி படைத் தலைமையகத்துக்கு இலவசமாக வழங்குவதற்குப் பனை அபிவிருத்திச் சபை சம்மதித்திருப்பதாகவும்-

இவற்றை நடுகை செய்து பராமரிக்கும் செலவுகளைப் படையினரே பொறுப்பேற்க வேண்டும் என அவர்களிடம் கூறியிருப்பதாகவும் பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் எஸ். கோகுலதாசன் தெரிவித்தார். (க-4-9)

# அன்னாசி, திராட்சை நாற்றுகள் தெற்கிலிருந்து தருவிக்க முடியும்

## விவசாயத் திணைக்கள அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், நவ. 16

அன்னாசி மற்றும்திராட்சை போன்ற நாற்றுக்களைத் தென்பகுதியில் இருந்து குடாநாட்டுக்கு விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளோம். நாற்றுக்களைப் பெற விரும்பும் விவசாயிகள், விவசாயத் திணைக்களத்தின் ஊடாக எம்முடன் தொடர்புகொள்ள முடியும்.

— இவ்வாறு திருகோணமலையிலுள்ள விவசாயத் திணைக்கள அதிகாரி ரி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

கடந்த 11ஆம் திகதி யாழ். மத்தியகல்லூரியில் இடம்பெற்ற குறைநிவர்த்தி சேவையில் கலந்துகொண்ட அவர் மேலும் கூறியதாவது;-

குடாநாட்டில் திராட்சை, அன்னாசி, வாழை போன்ற பயிர்களைச் சிறந்தமுறையில் பயிரிடமுடியும். எனவே இந்தவகையான பயிர்களைப் பயிரிட விரும்பும் விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் அவர்களுக்கு நல்ல இன நாற்றுக்களைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

கடந்த காலங்களிலும் விவசாயத் திணைக்களத்திற்கூடாக இத்தகைய நாற்றுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களிலும் இத்தகைய நாற்றுகளைப் பயிரிட விரும்பும் விவசாயிகள் எம்முடன் தொடர்புகொள்ள முடியும்.

நாம் விவசாயிகளுக்கான கடன் வசதிகள் எதனையும் வழங்கமுடியாது. அவர்களுக்கு விவசாயம் தொடர்பான ஆலோசனைகளை, சேவைகளை மட்டுமே வழங்க முடியும். இந்தக் குறைநிவர்த்தி சேவைக்கு வருகை தந்த விவசாயிகளில் பெரும்பாலானோர் தமக்கு விவசாயம் செய்ய நிதிஉதவி தேவை என்றே கேட்டனர்.

— இவ்வாறு அவர் கூறினார். (க-6-4)

# மாணவனைக் காணவில்லை

யாழ்ப்பாணம், நவ. 16

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியில் படிக்கும் 8 ஆம் ஆண்டு மாணவனை கடந்த 12 ஆம் திகதி முதல் காணவில்லை என அவரது தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பாஷையூர் இரண்டாம் குறுக்கு வீதியைச் சேர்ந்த இலங்கைநாதன் நிஜேந்திரன் (வயது 13) என்ற சிறுவனையே காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் கடந்த திங்கட்கிழமை மாலை 7 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டதாகவும், அதன் பின் இன்று வரை வீடு திரும்பவில்லையென்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

# பரீட்சை முடிவுகள் திங்கள்வெளியாகும்

யாழ்ப்பாணம், நவ.16

தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் பயிற்சிகளை முடித்து வெளியேறிய முதலாவது பிரிவு மாணவர்களுக்குரிய பரீட்சை முடிவுகள் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் முடிவுகளைத் திங்கட்கிழமை காலை 10 மணி முதல் அலுவலகத்தில் பார்வையிடலாம் எனவும்-

சித்தியெய்திய மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும்-நிலைய இயக்குநர் தெரிவித்துள்ளார். (உ)

# ம. எண்ணெய் விலை குறைப்பு

மண்எண்ணெய்யின் விலை நேற்று நள்ளிரவு முதல் 2 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் அதன் யாழ். அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது

இதுவரை ஒரு லீற்றர் 22 ரூபா 45 சதமாக விற்பனை செய்யப்பட்டுவந்த மண்எண்ணெய் இன்று முதல் 20 ரூபா 45 சதமாக விற்பனை செய்யப்படும் என கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (உ)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 16

வானொலி நாடக எழுத்தாளர் பா. சிவபாலனின் 'நாளை நல்ல நாள்' வானொலி நாடகத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் யாழ். கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜகோபால் (செம்பியன் செல்வன்) தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் கலந்து கொள்வார்

நூலுக்கான வெளியீட்டுரையை யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. வரதராசாவும், ஆய்வுரையை பிரபல எழுத்தாளரும் முன்னாள் ஆசிரியருமான அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையும் நிகழ்த்தவுள்ளனர். (உ-10)

# முன்பள்ளி ஆசிரியருக்கு!

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஈ.பி.டி.பியின் யாழ். தலைமை அலுவலகத்தில் ஒன்றுகூடுமாறு முன்பள்ளி ஆசிரியர் சங்கச் செயலாளர் எஸ். சத்தியலீலா கேட்டுள்ளார். (உ)

## கார்த்திகை சோமவாரத்தில்

# கீரிமலைக்கு பக்தர்கள் செல்ல படைத் தரப்பில் அனுமதி

சண்டிலிப்பாய், நவ. 16

கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி ஆலயத்தில் கார்த்திகை சோமவாரத்தில் பக்தர்கள் சென்று வழிபாடு நடத்துவதற்கு படைத் தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

சிவனுக்குரிய விரதங்களில் சிறந்ததாகிய சோம வாரங்களில் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் கார்த்திகை மாத திங்கட்கிழமைகளில் காலை 10 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை ஆலயத்தில் சங்கற்பம் செய்து, கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தமாடி நகுலேஸ்வரப் பெருமானை வழிபாடு செய்ய முடியும் என்று ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமைகளில் காலை 9மணிக்கு தெல்லிப்பழைஇராணுவ சோதனைச்சாவடி ஊடாக விசேட பஸ்கள் மூலம் ஆலயத்திற்குப் பக்தர்கள் செல்ல அனுமதி படைத்தரப்பினால் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-135)

# பரந்தன் ஊழியர் கவனத்துக்கு!

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியரின் வழங்கப்படாதிருக்கும் இவ்வருடத்துக்கான சம்பளப் பிரச்சினை சம்பந்தமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான சந்திப்பு இன்று காலை 10.30 மணியளவில் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் யாழ் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக் கலந்துரையாடலில் தொழிற்சாலை ஊழியர்களைப் பங்குகொள்ளுமாறு எழுதுவினைஞர் க. நாகமுத்து கேட்டுள்ளார். (க)

# படையினரின் சூட்டுக்கு மன்னாரில் இளைஞர் பலி!

மன்னார் நகரில் நேற்று முன்தினம் இரவு படையினரின் சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

அவர் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் என்றும்-

அவரிடமிருந்து 5 கிலோ கிராம் வெடிமருந்து நிரப்பப்பட்ட இரு கிளைமோர் குண்டுகள் உட்பட சில பொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும்-

பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இளைஞர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வீட்டின் சொந்தக்காரர்களான இளம் தம்பதிகள், கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கடந்த சில மாதங்களில் இதேபோன்று இப்பகுதியில் மூன்று இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என அறிவிக்கப்பட்டதும்—

பின்னர் அவர்கள் சிவிலியன்கள் எனத் தெரியவந்ததும் — குறிப்பிடத்தக்கதாகும். (உ)

# மத்திய கல்லூரியில் கணனி பயிலும் மாணவருக்கு!

யாழ். மத்திய கல்லூரியின் மகேஸ்வரி கணனி வள நிலைய மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மகேஸ்வரி கணனி வள நிலையத்தின் புதிய பிரிவு மாணவர்களையும் ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரிவு மாணவர்களையும் மற்றும் முறைசாராக் கல்விப் பிரிவில் கணனிக் கற்கை நெறிக்குப்பதிவு செய்த மாணவர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் க. இராசதுரை கேட்டுள்ளார். (உ-9)

# தபால்கள் வந்தன

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 300 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 35 தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டன.

இதேவேளை —

இக்கப்பலில் குடாநாட்டுக்கான அத்தியாவசிய மருந்துப் பொருள்களும் எடுத்து வரப்படுவதால் இடப்பற்றாக்குறை காரணமாகக் குடாநாட்டுக்கான — பெரும் எண்ணிக்கையான — எஞ்சிய தபால் பொதிகள் எடுத்து வரமுடியவில்லை என்றும் —

அவை திருகோணமலைத் தபாலகத்தில் தேங்கிக்கிடப்பதாகவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது (உ-6)

# மரண அறிவித்தல்கள்

## லிங்கப்பிள்ளை கனகம்மா (செல்லம்)

சரவணை கிழக்கைப்பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட லிங்கப்பிள்ளை கனகம்மா (செல்லம்) 10-11-2001 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் லிங்கப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகசபை - இரத்தினம் ஆகியோரின் மகளும் காலஞ்சென்ற தம்பையா - திருமேனிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும் சிவகுமார் (சுவிஸ்), தவகுமார் (கனடா), காலஞ்சென்ற விஜயகுமார், பரணிகா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மைதிலியின் மாமியாரும் இராகுலனின் பேர்த்தியும் சின்னம்மா, கந்தசாமி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பராசக்தி மற்றும் பூமணி(வவுனியா), பூரணம் (மன்னார்), திருநீலகண்டன் (H. M. R. கொழும்பு), பொன்னுச்சாமி, மகேஸ்வரி (பிரான்ஸ்), சோமசுந்தரம், இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16 - 11 - 2001) இன்று வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

நாரந்தனை வடக்கு, (94566) த. இராசலிங்கம்

## செல்லையா துரைரத்தினம்

(இளைப்பாறிய உத்தியோகத்தர்— பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், முன்னாள் ஆசிரியர் வெஸ்லி கல்லூரி, கொழும்பு)

தையிட்டியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை, வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா துரைரத்தினம் 14-11-2001 புதன்கிழமையன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான R. செல்லையா தம்பதிகளின் அன்பு மகனும், ஐயாத்துரை தம்பதியினரின் அன்பு மருமகனும், யோகமணியின் அன்புக் கணவரும், கௌரிசங்கர், பிரியா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், லீலாவதி, மாமலர் (லண்டன்), திருநாவுக்கரசு, காலஞ்சென்றவர்களான செல்வராணி, கமலாம்பிகை, பத்மினி, கருணாநிதி, ஆனந்தராசா ஆகியோரின் சகோதரரும், DR. பிரிதம் (லண்டன்), அருந்ததி (லண்டன்), காலஞ்சென்ற ஜீவித் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15-11-2001) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

89, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (94567) C. திருநாவுக்கரசு (சகோதரன்)

## உதயன்

### விவகாரமாகிவிட்ட வீதிக் கண்காணிப்பு

வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்பில் இன்று முதல் மீண்டும் தாங்கள் ஈடுபடப்போவதாக அந்தப் பணியில் ஈடுபட்டிருந்தோர் அறிவித்திருக்கின்றார்கள். இது தொடர்பாகப் பத்திரிகை அறிக்கை ஒன்றும் அவர்கள் சார்பில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இப்பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் நட்டநடு வீதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து, இந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது. இப்போது இந்தப் பணியை - இந்தச் சந்தர்ப்பத்தில் - மீண்டும் ஆரம்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர் சுட்டுக்கொல்லப்பட்டதை நியாயப்படுத்துவதோ அல்லது அந்த ஈனச் செயலை அங்கீகரிப்பதோ எமது நோக்கம் அல்ல.

வீதி விபத்துக்களைத் தவிர்க்கச் செய்து போக்குவரத்து ஒழுங்கை நேர்சீர் செய்யும் இந்த மகத்தான பணியைக் குறை கூறுவதோ, விமர்சனம் செய்வதோ, அவசியமற்றது என்று வீறண்டாவாதம் செய்வதோ எமது எண்ணம் அல்ல.

ஆனால் இந்த நேரத்தில் - இந்தப்பணி, மீண்டும் அவசர அவசரமாக ஆரம்பிக்கப்படத்தான் வேண்டுமா என்பதை, சம்பந்தப்பட்டோர் ஆழமாகச் சிந்தித்து, தமது மனதில் ஒரு சுய தேடலை ஊக்குவிப்பதற்குத் தூண்டுவது நமது கடமையாகுகின்றது.

நடந்த கொலையை யார் செய்தார்கள்? ஏன் செய்தார்கள்? அதற்கு அவர்கள் கூறும் காரணத்தில் கிஞ்சித்தேனும் நியாயம் உண்டா? நியாயம் இருந்தால், அதனை ஏற்றுச்செயற்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அவர்கள் காரணம் ஏதும் குறிப்பிட்டு, அது நியாயமற்றது என்று சம்பந்தப்பட்டோரால் ஏற்றுக்கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருந்தால், மீண்டும் சேவையில் ஈடுபடும் பணியாளர்கள் பலியாகாமல் காப்பாற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அல்லது வறுமையில் வாடும் இந்தப் பணியாளர்களை விளக்கில் வீழும் விட்டில் பூச்சிகளாகப் பயன்படுத்த சம்பந்தப்பட்டோர் திட்டமிட்டுள்ளனரா? - இப்படிப் பல கேள்விகள் எழுகின்றன. ஆனால் சம்பந்தப்பட்ட அறிக்கையில் தெளிவான பதில் ஏதும் இல்லை.

இந்தப் பணியாளர்கள் பொலிஸாரிடம் பயிற்சியோ, உதவியோ பெறாமல் (வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரின் ஆதரவுடன்) கடமையில் ஈடுபடுவர் என்ற அம்சம் மட்டுமே புதிதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால், இப்பணி தடைப்பட்டதற்கு இந்த அம்சம் மட்டும்தான் காரணம் என்று சம்பந்தப்பட்டோர்கள் கருதுகின்றார்கள் போல் தெரிகின்றது. அது சரியா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வது சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்குப் பொறுப்பானவர்களின் கடமை - உயிரோடு விளையாடும் விவகாரத்தில் ஒரு முக்கிய பொறுப்பு - என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

பொதுத் தேர்தலுக்கு இன்னும் இருபது நாள்கள் கூட இல்லை. அதற்குள் வாக்குத்தேடி வேட்டையாடுவதற்கு பல்வேறு குறுக்கு வழித் திட்டங்கள் செயற்படுத்தப்படுவது பலருக்கும் தெரியும். இந்த நிலையில் அவசரப்பட்டு இந்நடவடிக்கை எடுக்கப்படுவதால் இதுவும்கூட அரசியல் சிந்து விளையாட்டின் ஓர் அம்சமாக கணிக்கப்பட்டுவிடலாம். அப்படியானால் அதுவும் ஆபத்துத்தரும் விடயமே.

இது சம்பந்தப்பட்ட பணியாளர்களை பொறுத்தவரை மொத்தமாக - மூலதனமாக - நிதியைத் தரப்போகின்ற விவகாரம் அல்ல; நிரந்தர நியமனத்தை உறுதிப்படுத்தும் விடயமுமல்ல. எனவே, இது ஏற்கனவே உயிருடன் விளையாடும் ஆபத்தான விவகாரமாகிவிட்டிருப்பதால், அரசியல் புறச்சூழ்நிலையில் ஒரு தெளிவான நிலைமை வரும்வரை - தற்போது கலங்கியுள்ள குட்டை தெளியும்வரை - மூன்று, நான்கு வாரங்களாவது இந்த விடயத்தில் பொறுத்திருந்து நடவடிக்கை எடுப்பதே உசிதமானது. பொறுப்பானவர்களுக்கு இது சமர்ப்பணம்.

அத்தோடு ஒரு கேள்வி. இந்த வீதிக்கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவோர் சேவையில் நிரந்தரமாக்கப்படாவிட்டாலும், தினசரி கணிசமாக வேதனம் பெறுகின்றனர். அவர்களைத் 'தொண்டர்' என்று அழைத்து, சமூக சேவைத் தொண்டுச் சாயம் பூசுவது மற்றொரு 'பேய்க்காட்டல்' அல்லவா?

இவர்கள் தொண்டர்கள் என்றால் அரச நிறுவனங்களில் பணிபுரியும் சகல சமயா சமய ஊழியர்களையும் 'தொண்டர்கள்' என்று அழைக்கப்போகின்றோமா?

அல்லது இந்தப் பணியாளர்கள் கட்சிகளின் தொண்டர்களாகக் கருதப்பட்டு அதன் காரணமாக அப்படிப் பெயரிட்டார்களோ என்ற சந்தேகமும் எழுவது தவிர்க்கமுடியாததாகியிருக்கின்றதே!

## விமானத்துக்குள் வைத்து பெட்டிகளில் கள்ள வாக்குப் போடத் திட்டமாம்!

கொழும்பு, நவ.16

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்கான வாக்குச் சீட்டுகளை விமானங்களில் கொண்டு செல்லும் போது நடுவானில் வைத்து வாக்குப் பெட்டிகளில் வாக்குகளை செலுத்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாக ஐ.தே. கட்சியின் பிரதம செயலாளர் சென ரத் கபுகொடுவ, தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளார்.

இந்த மோசடியைத் தவிர்ப்பதற்காக வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்கான வாக்குச் சீட்டுகள் விமானத்தில் கொண்டுசெல்லப்படும்போது ஐ.தே.க. பிரதிநிதிகளையும் விமானத்தில் செல்ல அனுமதி வழங்குமாறு அவர் தேர்தல் ஆணையாளரிடம் கோரியுள்ளார். (ஐ)

## செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,நவ.16

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமா முதலாம் வருடப் பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரிய மாணவர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையே யாழ்.இந்துக் கல்லூரி நிலையத்தில் நடைபெறும். என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது என சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரி.வில்வநாதன் தெரிவித்திருக்கிறார்.

(க-7)

## ரணிலுக்குப் பூரண பாதுகாப்பு கோரிக்கை

கொழும்பு,நவ.16

ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலையடுத்து அவருக்கு பூரண பாதுகாப்பு வழங்க வேண்டுமென அரசிடம் கோரியுளளோம்.

ஐ.தே.கட்சியின் பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு நேற்று முன்தினம் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (க-ரி)



பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கம், அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நுண் கருத்திட்டத்தின் கீழ் சங்க உறுப்பினர்களான பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக் கடனை அண்மையில் வழங்கியுள்ளது. சங்கத் தலைவர் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற கடன் வழங்கும் வைபவத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஸ்ரீபதி பயனாளியான பெண் ஒருவருக்கு கடன் வழங்குவதைப் படத்தில் காணலாம். பிரான்பற்று கிராம அலுவலர் எஸ்.நித்தியானந்தனும் படத்தில் காணப்படுகின்றார். *(படம் சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

## நாட்டு நடப்பு

### களவு

காப்பு

**கொள்ளை யடித்த பணம் கொண்டுவரும் நகை நட்டிலிவை**
**உள்ளதில் எட்டிலொன்று உனக்கு நான் தருவேன் - வேழமுகா**
**எள்ளளவும் அடி உதைகள் எதுவுமே வேண்டாமல்**
**கள்வனெனைக் காப்பாற்றித் தா.**

*- விகடகவி.*

துணைவேந்தர் விருந்துபசார விழாவில் பேச்சு:

## யாழ்.பல்கலை தகுதியானவர்களுக்கே கௌரவப் பட்டங்களை வழங்குகின்றது

### இதற்கு உதாரணமானவர் அருட்கவி விநாசித்தம்பி

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்.பல்கலைக்கழகம் தகுதியானவர்களுக்கே கௌரவப் பட்டங்களை வழங்குகின்றது என்பதற்கு உதாரணமானவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி.

- இவ்வாறு கூறினார் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை.

அருட்கவி சீ.விநாசித்தம்பிக்கு முதுகலைமாணிப் பட்டம் வழங்கப்பட்டமை குறித்து ஏற்பாடுசெய்யப்பட்ட விருந்துபசார விழா, அண்மையில் அளவெட்டி ஸ்ரீ நாகேஸ்வரம் ஆலயத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே துணைவேந்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். இந்துசமயப் பேரவையின் தலைவரும், ஆத்மீகப் பெருந்தகையும், சிறந்த சைவத்தமிழ்ப் பேறிஞருமான அருட்கவி சீ.விநாசித்தம்பிக்கு முதுகலைமாணிப்பட்டம் வழங்கியதைப் பாராட்டி, நாளாந்தம் எமக்குப பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் வந்துசேர்ந்தவண்ணம் உள்ளன.

யாழ்பல்கலைக்கழகம் பல சோதனைகளுக்கு மத்தியில் மிகச்சிறந்த முறையில் இயங்கிவருகிறது. ஆண்டுதோறும் எமது பட்டமளிப்பு விழாவின் போது தமிழுலகிலுள்ள பல கல்வியாளர்களை அழைத்துக் கௌரவித்து வருகின்றோம்.

அந்தவகையில் அருட்கவி ஐயா அவர்களை இந்த ஆண்டு கௌரவித்தோம். இவருக்கு வழங்கிய கௌரவம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை நாம் உளமார உணர்கிறோம். பலரிடம் இருந்து இன்று இத்தகைய கோரிக்கைகள் வந்தவண்ணமே இருக்கின்றன. இதைப் பார்க்கும்போது அருட்கவி ஐயா, மக்களாதரவுபெற்ற ஓர் அறிஞர் - ஆத்மீகவாதி என்பது தெளிவாகிறது.

எமது பட்டமளிப்பு முடிந்து இன்று இரண்டுமாதமாகியும் இவருக்கு வாழ்த்துக்கள் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன. நாம் இம்முறை வழங்கிய பட்டங்கள் தொடர்பாகச் சிலர் விமர்சிக்கின்றனர். அதில் அருட்கவிக்கு வழங்கிய பட்டம் அதிகரித்திருக்கவேண்டும் என்பதும் ஒன்று. எது "எவ்வாறிருப்பினும் அருட்கவி ஐயா எமது பட்டமளிப்பு விழாவுக்கு வருகைதந்து இப்பட்டத்தை ஏற்றமை எமது பல்கலைக்கழகத்திற்கு கௌரவத்தை வழங்கியுள்ளது - என்றார்.

யாழ்.மாவட்ட முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு தனது உரையில் -

வருடாவருடம் ஆயிரக்கணக்கில் பட்டதாரிகள் வெளியேறிக்கொண்டே இருக்கிறார்கள். இவர்களிடம் இலக்கியத்தில் ஒரு சிறு கேள்வி கேட்டால், இது எமது சிலபஸ்ஸில் இல்லை என்று கூறிவிட்டுச் செல்கிறார்கள். இவர்கள் B.A., M.A., கலாநிதி பெற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். நாமென்ன செய்யமுடியும்! நமது தமிழ்க் கல்விப் பாரம்பரியம் இப்படியாகிவிட்டது. இதனை மாற்றப் புதிய திட்டத்தை முன்வைக்க வேண்டும்.

இன்று அருட்கவி போன்றோர்க்குப் பட்டம் வழங்குவதால் இந்த B.A., M.A. படித்தவர்கள் கொஞ்சம் சிநதிப்பார்கள் என்று எண்ணுகிறேன். அருட்கவியின் தராதரத்துக்கு இவருக்குக் கலாநிதிப் பட்டத்தைப் பல்கலைக்கழகம் வழங்கியிருக்கவேண்டும். இது மாபெரும் தவறாகும் - என்றார்.

இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் தனதுரையில் -

அருட்கவி விநாசித்தம்பி அவர்கள் நல்ல அருளாளர், சிறந்த கவிஞர், வேதாந்த, சித்தாந்த சாஸ்திரங்களைத் துறைபோகக் கற்றவர். நூறுக்கு மேற்பட்ட நூல்களை யாத்தவர். சோதிட சாஸ்திரம், மனையடி சாஸ்திரம் முதலியவற்றில் வல்லவர், வாக்குப் பலிதம் உள்ளவர், திரிகாலமறியும் ஆற்றலுடையவர், நல்ல உயர்ந்த ஆத்மீகவாதி. இவருக்குப் பட்டம் வழங்கி யாழ்.பல்கலைக்கழகம் தனக்குப் பெரும் புகழைத் தேடிக்கொண்டுள்ளது - என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்கினார். பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், ஐ.கோ.சந்திரசேகரம், நாவி.மு.நவரத்தினம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். (க-7)

மீள் குடியேறியவர்களுக்கான

## அரசின் 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அரியாலை மக்களுக்கு வழங்காதது ஏன்?

### பாரபட்சம் குறித்து விசனம் தெரிவிப்பு

கோண்டாவில்,நவ.16

தென்மராட்சிப் பகுதியில் மீளக் குடியேறியவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அரியாலைப் பகுதி மக்களுக்கு வழங்கப்படவில்லை. இது குறித்து அரியாலைப் பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளார்கள்.

கடந்த மே மாதம் இடம்பெற்ற இடப்பெயர்வின் போது அரியாலைப் பகுதியைச் சேர்ந்த மக்களும் தமது உடைமைகளைக் கைவிட்ட நிலையில் வீடுகளைவிட்டு இரவுடன் இரவாக வெளியேறி இருந்தனர்.

இவர்கள் இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து பல கோடிரூபா பெறுமதியான சொத்துக்கள் சூறையாடப்பட்டதுடன் சேதத்துக்கும் அழிவுக்கும் உள்ளாகின.

தற்போது இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் மீண்டும் அரியாலையில் சில பகுதிகளில் மீளக் குடியேறியுள்ளனர். 'இவர்களுக்கு இடம்பெயர்ந்தபோது வழங்கப்பட்ட 2 ஆயிரம் ரூபா தவிர்ந்த வேறு எந்தக் கொடுப்பனவுகளும் இதுவரை வழங்கப்படவில்லை.

மீளக் குடியேறும் அரியாலைப் பகுதி மக்களுக்கு வீட்டுக் கூரைகளுக்கான தகரங்கள், 'சீற்'றுக்கள் வழங்கப்படும் என்று அப்போது பிரதேச செயலரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இன்றுவரை எதுவும் வழங்கப்படவில்லை.

அழிந்து, சேதமடைந்த வீடுகள் சம்பந்தமான பட்டியல்களை கிராம அலுவலர்கள் ஏற்கனவே பிரதேச செயலரிடம் கையளித்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. (க-86)

### நாளை

**கார்த்திகை 2**
**சனிக்கிழமை**
**திதி : துதியை**
**முற்பகல் 11.36 வரை.**
**நட்சத்திரம் : கேட்டை**
**முன் இரவு 9.09 வரை.**
**சுபநேரம் : 3.08 - 4.38**
**ராகுகாலம் : 9.08 - 10.38**
**(பழைய நேரப்படி)**

### உதயவாக்கு

தனது துன்பத்தை வெளியுலகுக்குக் காட்டாமல் இருப்பவனைவிட, தனது மகிழ்ச்சியை வெளியுலகுக்குக் காட்டாதவன் பெரியவன் ஆவான்.

2வருடங்களாகச் சம்பளம் பெறாத

## உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்கள் 5 ஆயிரம் ரூபாவைப் பெற மறுப்பு!

உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு வடமாகாண அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டபோதிலும் அதனைப் பெற ஊழியர்கள் மறுத்துவிட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு, 'ரான்' அலுவலகத்தில் வைத்து இத்தொகையை வழங்க காசோலைகள் எழுதப்பட்டன. எனினும் ஊழியர்கள் அந்தக் கொடுப்பனவைப் பெற மறுத்துத் திரும்பிச் சென்றனர்.

இந்த ஊழியர்களுக்கான சம்பளம் கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கப்படாமல் உள்ளது. கடந்த காலங்களில் இவர்களின் சம்பளம் திறைசேரியினால் அரச அதிபருக்கு அனுப்பப்பட்டு, அவர் மூலம் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக இவர்களுக்கான சம்பளம் திறைசேரியினால் செயலகத்திற்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-86)

## மந்திகை ஆஸ்பத்திரியில் நேற்று 'கிளினிக்'குகள் நடைபெறவில்லை

### நோயாளர் திரும்பிச் சென்றனர்

வடமராட்சி,நவ.16

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் 'கிளினிக்' சிகிச்சைகள் நேற்று நடைபெறவில்லை.

இதனால் நேற்றுக் காலை முதல் கிளினிக்குக்காக ஆஸ்பத்திரிக்கு வந்திருந்த நூற்றுக் கணக்கான நோயாளர்கள் சிகிச்சையின்றி ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதைக் காண முடிந்தது.

ஒரு சில வைத்திய அதிகாரிகள் மட்டும் கடமையாற்றும்' இந்த ஆஸ்பத்திரியில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரு டாக்டர்களிடையே ஏற்பட்ட பிணக்கின் எதிரொலியாகவே 'கிளினிக்'குகள் இடம்பெறவில்லையெனக் கூறப்பட்டது.

(க-173)

## கைதடி மக்களுக்கு இரண்டாம் கட்டக்கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,நவ.16

கைதடிப் பகுதியில் மீளக் குடியேறிய ஆயிரத்து 850 குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டக்கொடுப்பனவான 7ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படவுள்ளதாக வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்தன.

மீளக் குடியேறிய குடும்பங்களுக்கும் முதற்கட்டமாக 5ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டக்கொடுப்பனவை அடுத்தவாரமளவில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (க-180)




இதயம் கனிந்த வாழ்த்துக்கள் கூறி உவகை அடைகின்றோம்

"முதுகலைமாணி" விசேட விருது பெற்ற
அளவையூர் அருட்கவி
சீ.விநாசித்தம்பிப் புலவர் ஐயா
அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து
சமயப்பணிகள் பல ஆற்ற மாத்தனை முருகனின்
பாதாரவிந்தங்களைப் பணிந்து வேண்டுகின்றோம்.
இதயம் கனிந்த வாழ்த்துக்கள் கூறி
நாம் உவகை அடைகின்றோம்.
கொக்குவில், மாத்தனைக் கந்தசுவாமி கோயில்
பரிபாலன சபையினர்.
(94536)


# சந்திரிகா வெறும் ஜனாதிபதிதான்; ஐ.தே.கவின் கைகளில் ஆட்சி அதிகாரம்!

## இப்படிக் கூறுகிறார் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு,நவ.16

அடுத்த நாலரை வருடங்களுக்கு சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி பதவியில் இருந்தாலும் நாட்டை நிர்வகிக்கப் போவது ரணிலின் தலைமையிலான ஐ.தே.கட்சியின் ஆட்சிதான்.

ஐ.தே.கட்சிப் பிரமுகரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இப்படிக் கூறியிருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் புதன்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த நாலரை வருடங்களுக்கு சந்திரிகா குமாரதுங்கவே ஜனாதிபதியாக இருப்பார்; அவரே நாட்டை நிர்வாகம் செய்வார். ஐ.தே.கட்சி பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தாலும் பிரயோசனம் இல்லை என்று ஜனாதிபதியும், அவரது சகோதரனான அநுரா பண்டாரநாயக்காவும் கூறிவருகின்றனர்.

'யானை-புலி கூட்டு' என்று கூறி வந்த கதை போன்ற கதைதான் இதுவும்.

நாட்டில் நிதிவளம், கொடுப்பனவு ஆகியவற்றை நாடாளுமன்றம் மூலமாகவே மேற்கொள்ளமுடியும். அந்தத்துறைக்கு நிதி ஒதுக்கீடு வழங்க வேண்டும். எவ்வளவு தொகை வழங்க வேண்டும் என்பன பற்றி முடிவுசெய்ய வேண்டிய பொறுப்பு நாடாளுமன்றத்திடமே உள்ளது. ஜனாதிபதியால் இந்த விடயங்களில் எதுவும் செய்ய முடியாது. புதிய நாடாளுமன்றம் உருவாகாவிட்டால் நிதி விவகாரங்கள் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்படும். அதனால்தான் ஜனாதிபதி புதிய தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

- இப்படி அவர் கூறினார். (க)


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தாயவள் பெற்று மகிழ்ந்திட
05 - 11 - 1968



காலனவன் கவர்ந்து மகிழ்ந்திட
27 - 10 - 2000

## அமரர் திரவியம் விஜயதரன்

திதி: பூர்வபக்க பிரதமை 16.11.2001

எங்கள் பாசத்தின் குலவிளக்கே விஜி
ஆண்டொன்று சென்றதடா உன் புன்சிரிப்பு பூத்தமுகம் மறைந்ததங்கே!
அம்மாவின் உள்ளம் அனலாய் கொதிக்குதையா!
சிறுவயதில் அப்பாவை இழந்து ஆறுதல் தந்த தெய்வமே விஜி
கண்ணெனப் போற்றி நாமும் எண்ணிலாக்கனவு கண்டோம்
உனது உடன் பிறந்தோர் கதறியழ (அண்ணா, தம்பி, தங்கை)
உனது ஒரேயொரு தங்கைக்கு கற்பனைகள் பல வளர்த்தாய்
அத்தனையும் கனவானதோ? மைத்துனர், மைத்துனி
ஏங்கித் தவித்திட, அப்பா இல்லா குறையைத் தீர்த்த
அம்மாவின் உடன் பிறப்புக்கள் தேம்பி அழுதிட
பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமா, அத்தைமார்,
அன்ரிமார், உடன்பிறவாச் சகோதரங்களைத் துயரில் மூழ்கவைத்து,
நெடும் பயணம் ஆனாயோ?
அண்ணா மகள் அபியைக் காணத்துடித்தாய்! கடுகதியில்
காலனவன் கவர்ந்ததென்ன? நீயுறங்கிய கட்டிலும்
பூங்காவனமும் சோகத்தால் கரைந்துள்ளம் வாடுகின்றார் பெரியம்மா!
சிறகிழந்த பறவையைப் போல்
அம்மாவின் கண்ணில் ஈரம் காயவில்லையே!
ஓராண்டென்ன ஒரு ஜென்மம் போனாலும்
ஓயாது எம் துயரம்........!

அனைவரையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில்
கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

முகவரி
நிரந்தரம்: நாவற்குழி.
தற்காலிகம்: முடமாவடி.

தாய், சகோதரர்கள்,
சமரக்கொடி குடும்பத்தினர்.
(94521)



# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 16 - 10 - 1972



உதிர்வு 16 - 11 - 1998

## செல்வி ரெறென்ஷியா காந்திமதி பீரிஸ்

மகள், சகோதர, சகோதரி என்னும்
உறவால் எம்மோடு இணைந்து இறப்பு
என்னும் பிரிவால் எம்மை விட்டகன்றாயோ?
எங்கள் அன்பின் மதியே!
நீ ஆற்றிய பணிகள் இன்னும் எம்மனதை
சுட்டெரித்துக் கொண்டிருக்கின்றன!
எமக்கு நோய் என்று வந்துவிட்டால் உடனே
பஞ்சாய்ப் பறக்க வைப்பாய்! ஆனால் உனக்கு
வந்த நோயை மாற்ற முடியாமல் போனதேனோ?
எம் நெஞ்சம் இப்பவும் அன்றுபோல் இன்றும் கதறுகின்றது.

15/1, டேவிற் றோட்,
யாழ்ப்பாணம்.

(94514)

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.


## மட்டு.கிராமங்கள் தமிழ்க் குழுக்களால் ஆக்கிரமிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்க் குழுக்கள் கிராமங்களை ஆக்கிரமித்துள்ளதால், அந்தக் கிராமங்களுக்குள் வேறு கட்சிகளைச்சார்ந்தவர்கள் சென்று பிரசாரம் செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு, பொது மக்கள் ஐக்கிய முன்னணி, ஐ.தே.கட்சி தவிர்ந்த தமிழ்க் குழுக்களான புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) ஆகியன போட்டியிடுகின்றன. (க-ரி)

## இந்து சமயச் சொற்பொழிவு

வடபிராந்திய இந்துப் பேரவை ஏற்பாடுசெய்துள்ள இந்துசமயச் சொற்பொழிவு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.குமாரசுவாமி வீதியில் உள்ள வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமி தலைமையில் நடைபெறும் இந்தச் சொற்பொழிவு நிகழ்வில் "இந்து ஆலயங்கள், இந்துமன்றங்கள், அறநெறிப் பாடசாலைகளும் அவற்றின் பணிகளும்" என்றதலைப்பில் சி.தெய்வநாயகம்பிள்ளை (உதவிப் பணிப்பாளர் - இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்) சொற்பொழிவு நிகழ்த்துவார். (க-7)

## ஹக்கீம் பேசிய கூட்டத்தில் கல்வீச்சு!

காத்தான்குடி,நவ.16

காத்தான்குடியில் நேற்று முன்தினம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பேசிய கூட்டத்தில் சரமாரியாக கற்கள் வீசப்பட்டன. தொடர்ந்து குண்டு ஒன்று வெடித்த சத்தமும் கேட்டது.

பாதுகாப்புப் பகுதியினர் வான் நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததை அடுத்து கூட்டம் இடைநிறுத்தப்பட்டது.

காத்தான்குடி முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகமும் உடைத்து தகர்க்கப்பட்டது. இந்தச் சம்பவத்தின்போது சிலர் சிறுகாயங்களுக்கு உள்ளானர். (க-5)

## யாழ்.,மட்டக்களப்பு தேர்தலை ரத்துச் செய்ய கோருகிறது பூமிபுத்ர!

கொழும்பு,நவ.16

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் பட்டியலில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர். எனவே அங்கு தேர்தலை ரத்துச் செய்ய வேண்டுமென பூமிபுத்ர கட்சி கோரியுள்ளது.

அக்கட்சியின் அமைப்பாளரான ஹரிச்சந்திர விஜயதுங்க விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-5)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



ஸ்ரீஸ்கந்தராசா தரணீதரன்
(சட்டத்தரணி)
மண்ணில் உதித்தது: 26.10.1965
விபத்தில் மடிந்தது: 27.10.2000



திருமதி
கனகசபை ஈஸ்வரதேவி
மண்ணில் உதித்தது: 27.03.1948
விபத்தில் மடிந்தது: 27.10.2000



செல்வன்
கனகசபை உதயகுமார்
மண்ணில் உதித்தது: 08.11.1967
விபத்தில் மடிந்தது: 29.10.2000



செல்வன்
கனகசபை செந்தூரன்
மண்ணில் உதித்தது: 27.11.1984
விபத்தில் மடிந்தது: 30.10.2000

*திதி: 16.11.2001 வெள்ளிக்கிழமை*

அருமை மகனே! எம் அன்புருவே!! ஆருயிரே!!!
பெருமை பெற வைத்த பெறற்கரிய பெரும்பேறே!
உயிரினும் மேலான உத்தமனே உன்னுடனே
மாமி ஈஸ்வரதேவியும் மைத்துனர்கள் உதயகுமார்
செந்தூரன் உடனாக விபத்தினிலே திடீரென்று
காலமெல்லாம் நாம் கதறக் காலன் கவர்ந்து சென்றானே!
ஆறாத் துயரினிலே ஆண்டொன்று சென்றதையா!
மாறாது துன்பம் மறக்காது உம் நினைவு!
தேறும் வழி காணாது சிந்தை கலங்குகின்றோம்!
கண்ணீர் மலர் சொரிந்து காணிக்கை செலுத்துகின்றோம்!

*திருமால் அச்சகம்,*
*393, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(94326)

ச.ஸ்ரீஸ்கந்தராசா J.P.
குடும்பத்தினர்.

# புலிகளின் போராட்ட வரலாற்றில் மூன்று படைகளுடன் நடந்த மோதல்



விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியாரான அடேல் பாலசிங்கத்தின் 'சுதந்திர வேட்கை' என்னும் ஆங்கில நூலின் மொழிபெயர்ப்புத் தொடர் இது.

**பெண்** போராளிகளுடன் எனது நேரத்தை நான் செலவிட்டுக்கொண்டிருந்தேன். அவ்வேளைகளில் பிரபாகரனுடனும் மற்றும் தலைவர்களுடனும் பாலா பேச்சு நடத்திக்கொண்டிருந்தார்.

பிரேமதாஸாவின் நோக்கம், அவருடைய வியூகம் என்பன பற்றி ஆராய்ந்திருக்கிறார்கள். இவையெல்லாவற்றையும் விட முக்கியமாக இந்தியப் படை இங்கு நிலைகொண்டிருப்பது பற்றி விவாதித்திருக்கிறார்கள்.

தமிழரின் ஆயுதப் போராட்டம் பற்றி அறிந்து கொள்வதில் பிரபாகரன் குறியாக இருந்தார் என்று பாலா பின்னர் தெரிவித்தார்.

### பிரேமதாஸாவுடன் பேச்சு

பிரேமதாஸாவுக்கும் விடுதலைப் புலிகளின் தூதுக் குழுவினருக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளில் பரிமாறப்பட்ட கருத்துக்கள் பற்றி பிரபாகரனுக்கு விலாவாரியாக பாலா எடுத்துச்சொன்னார்.

கொழும்பிலிருந்து குறியீட்டு முறையில் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்த போதே பிரபாகரனுக்கு பாலா தகவல் அனுப்பிக்கொண்டிருந்தார். ஆனால் அந்தப் பேச்சுப் பற்றி மட்டுமல்ல அதில் அரச தரப்பில் கலந்துகொண்டவர்கள் பற்றியும் அவர்களின் எதிர்பார்ப்புக்கள், அவர்களின் கருத்துக்கள் பற்றியும் நேரடியாகவே பாலா எடுத்துச்சொன்னார்.

கொழும்பில் தனது சொந்த அதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டும். அதற்காக இலங்கையிலிருந்து இந்தியப் படைகளைத் திருப்பி அனுப்பு



வதில் பிரேமதாஸா மிகுந்த உறுதியுடன் இருக்கிறார். இதற்கு விடுதலைப் புலிகளின் தங்குதடையற்ற ஆதரவை அவர் எதிர்பார்க்கிறார்., இந்த விவரங்களை பாலா பிரபாகரனிடம் எடுத்துச்சொன்னார்.

இலங்கையின் அரசியல் நீரோட்டத்தில் விடுதலைப்புலிகள் கலந்துகொண்டு தேர்தலில் போட்டியிட முன்வரவேண்டும். அவ்விதம் புலிகள் முன்வந்தால் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சபையை கலைத்துவிட ஜனாதிபதி பிரேமதாஸா விருப்பம் தெரிவித்திருந்தார்.

இந்த விவரங்களையும் பாலா எடுத்துக் கூறினார்.

இலங்கைப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் போர் நிறுத்தம் கொண்டுவரப்படவேண்டும். அவ்விதம் நிறுத்தப்பட்டால் இந்தியப் படை விடுதலைப் புலிகள் மீது நடத்தும் தாக்குதல் போரை நிறுத்துமாறு இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியும். இவ்வாறு இறுதியில் பிரேமதாஸா தெரிவித்தது பற்றியும் பாலா பிரபாகரனிடம் விளக்கினார்.

இந்த விஷயத்தில் இலங்கை அரசு ஆர்வத்துடனும் நேர்மையுடனும் இருக்கவேண்டும். அப்படியானால் போர்நிறுத்த யோசனையை ஏற்றுக் கொள்ளலாம். பிரேமதாஸாவுடன் இடைக்கால அரசியல் உடன்பாட்டுக்கும் வரலாம். இவைபோன்ற நடவடிக்கைகளுக்கு சாதகமான கருத்தை பிரபாகரன் அன்று கொண்டிருந்தார் என்று பின்னர் பாலா என்னிடம் தெரிவித்தார்.

மொத்தத்தில் இந்தியத் துருப்புக்களை இந்தியா திரும்பப் பெற்றுக்கொள்ளச்செய்வது. பிரேமதாஸாவின் நிர்வாகத்துடன் அரசியற் பங்கீடு செய்துகொள்ளப் பேச்சுவார்த்தை நடத்துவது இவை போன்ற நடவடிக்கைகளுக்கு விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் பாலாவுக்கு பச்சைக் கொடி காட்டியது.

### தமிழ்த் தேசிய இராணுவம்

இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு நாங்கள் மீண்டும் கொழும்புக்குப் போவதற்கு ஆயத்தம் நடந்தது. அவ்வேளையில் புலிகளுக்கு எரிச்சலூட்டும் வகையில் தமிழ்த் தேசிய இராணுவம் வளர்ந்திருந்தது. அதன் ஆதரவுடன் இந்தியப் படைகள் விடுதலைப் புலிகள் மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளன என்று பிரபாகரன் எங்களிடம் தெரிவித்தார்.

கொழும்பில் பிரேமதாஸா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்று வந்த சமாதானப் பேச்சு வார்த்தைகளினால் ராஜீவ் நிர்வாகம் அவமானமும் ஆத்திரமும் அடைந்தது.

விடுதலைப் புலிகளின் தலைமையையும், விடுதலைப் புலிப் படையையும் அழித்தொழிப்பதற்கு ராஜீவ் நிர்வாகம் கங்கணம்கட்டியது.

ஆயுதங்களும் போர்த் தளபாடங்களும் பற்றாக்குறையாக இருந்தன. இதனால் பிரேமதாஸாவிடம் இதற்கான உதவியைக் கோருமாறு பாலாவைக் கேட்டுக்கொண்டார் பிரபாகரன்.

தீவிரமாகத் தாக்குதல்களை நடத்திய இந்திய இராணுவத்துடனான எதிர்ப்பைத் தொடர்ந்து வலுப்படுத்தும்படியும் உத்தரவிட்டார்.

### பெரிய ஆபத்து

உண்மையான பெரிய ஆபத்து இருந்தது. திட்டமிட்ட முறையில் காட்டுப் பகுதியில் இந்தியப் போர் விமானங்களின் குண்டுவீச்சுக்களும் பீரங்கித் தாக்குதல்களும் தொடர்ந்து நடந்தன. இவை காரணமாக எங்களுக்கு நடுக்கமான சூழ்நிலை ஏற்படுவதை உணர்ந்தோம்.

இந்திய இராணுவம், இலங்கைப் படை, தமிழ்த் தேசிய இராணுவம்



ஆகிய மூன்று படைப்பிரிவுகளை எதிர்த்துநின்று சமாளிக்க வேண்டியிருந்தது.

அதுதான் விடுதலைப் புலிகள் தமது ஆயுதப்போராட்ட வரலாற்றில் இன்றுவரை சந்திக்காத மிகக் கடினமான கட்டம் என்று சொல்லலாம்.



பிரேமதாஸாவுடன் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொள்வதன் மூலம் இலங்கைப் படையின் பிரச்சினையைச் சமாளிக்கலாம்.

ஆயினும் இந்திய இராணுவம், தமிழ்த் தேசிய இராணுவம் ஆகியவற்றின் ஆபத்துக்கள் பெரிதும் அதிகரித்தன.

உயர்ந்த தரத்தில் அதிதீவிர கட்டுப்பாடும் வீரம் செறிந்த கெரில்லாப் போர் வல்லமையும் கொண்ட போராளிகளைத் தமிழீழ விடுதலைப் புலிகள் கொண்டிருந்தனர்.

மரபுரீதியான முறையில் ஒரு பெரிய படையைச் சமாளிப்பதற்கு விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களும் போர்த் தளபாடங்களும் தேவைப்பட்டன.

தமிழர் தாயகத்திலிருந்து இந்தியப் படைகள் வெளியேறும் வரையாவது அந்தப் படைகளுடன் தாக்குப் பிடித்து நிற்கவேண்டுமே.

பேச்சுவார்த்தைகளின்போது முகங்கிய பிரமுகராக அதுவரை பணியாற்றியவர் பாலா.

அவரிடம் ஆயுதங்களைத் தேடிப் பெறும் உணர்ச்சிமிக்க பொறுப்பு வழங்கப்பட்டது.

அதுவும் யாரிடமிருந்து? இயக்கத்தின் வரலாற்றுக் காலம் முழுவதும் முக்கிய எதிரியாக இருந்த ஒருவரிடமிருந்து ஆயுதங்களைப் பெறும் பொறுப்பை பாலா ஏற்றுக் கொள்ளவேண்டியிருந்தது. *(வளரும்)*

---

# முருகனை நோற்கும் விரதங்களில் முதன்மையானது கந்தசஷ்டி விரதம்



இன்று கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகின்றது. முருகனுக்குரிய இந்த விரதம் மிகவும் மகிமை பொருந்தியது. கந்தனுக்குரிய 'சரவண பவ' என்ற ஆறெழுத்து மந்திரம் இந்தக் கந்தசஷ்டியை நினைவூட்டுகின்றது.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன். ஆணவ மேலீட்டினால் அகந்தைகொண்ட சூரபன்மன் அறுமுகப்பெருமானின் அருட் கருணைத், திறனைப் புரிந்துகொள்ளாமற் போர்புரிந்தான்.

*"ஆதலின் நமது சக்தி அறுமுகன்;*
*அவனும் யாமும் பேதகமி லோம்"*

- என்று இறைவனால் அருளிச்செய்யப்பட்ட பெருமையுடையவன் முருகன். சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து உதித்தவன் குமரன்.

அவுணரை அழிக்கவென்றே வந்த அறுமுகன் சூரபன்மனுக்கு சிறிதே ஞானத்தைக் கொடுத்துத் தனது திருப்பெருவடிவத்தைக் காட்டியருளினான். பகைவனுக்கும் கருணைகாட்டும் தெய்வீகத்தை என்னென்பது?

### கந்தன் கழல் பணிவோன்

'பரங்கருணைத் தடங்கடலாகிய பரமேஸ்வரனின் குழந்தையாகிய முருகனைப் பாலன் என்று எண்ணிவிட்டேனே. இவனே உண்மையான பரம்பொருள்' என்று சிறிது நேரம் உணர்ச்சி மேலீட்டினால் உவகையுற்ற சூரன், முருகப்பெருமானைச் சரணடைய எண்ணினானாம். கணப்பொழுதுதான் அந்தஎண்ணம் - மமதை - தலையெடுக்கவே சூரபன்மன் வெகுண்டெழுந்தான். கந்தனின் கழலிணைகளைக் கைதொழுது வணங்குதல் முறையோ? நான் யார்? ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அடக்கி ஆளும் அசுரனன்றோ! ஆணவ முனைப்பு வந்ததும் ஆண்டவன் நினைப்பு மறைந்துவிட்டது. சூரபன்மன் போர்தொடுத்தான். 'சூர்மா மடியத்தொடு வேலவனே' என்று

## இன்று கந்தசஷ்டி ஆரம்பம்

அருணகிரிநாதர் அருளியதுபோல் அசுரகுலத்தை அறவே அழித்தொழிக்கப் புறப்பட்டுவிட்டான் அறுமுகன்.

அந்த நாள்களை நினைவு கூருமுகமாகவே கந்தசஷ்டி விழா கந்தன் ஆலயங்களில் நடைபெறுகிறது.

சட்டியில் இருந்தால் அகப்பையில வரும் என்று சிலர் கூறுவதுண்டு. அதாவது சஷ்டியில் விரதமிருந்து ஷண்முகப் பெருமானைச் சிந்தித்து நின்று, சேவித்து வந்தித்து வணங்கினால் கருப்பையிலே சிசு உருவாகிக் குழந்தைப்பேறுகிட்டும் என்பதே அதன் பொருளாகும். மக்கட் செல்வம் கிடைக்காதவர்கள் ஆறு நாள் உபவாசமிருந்து கந்தரனுபூதி, கந்த சஷ்டிகவசம், கந்தரலங்காரம் முதலியவற்றைப பாராயணஞ்செய்து முறைப்படி நோற்று பாரணை முடித்தால் நிச்சயமாகக் குழந்தைப்பேறு உண்டாகும் என்பது ஆன்றோர் முடிபு.

கந்தசஷ்டி விரதத்தை நோற்று விளையாட்டாகவும் வேடிக்கையாகவும் பொழுதுபோக்குதல் தகாது. அது மகாபாவம். விரதமிருப்பவர்கள் முறையாக அனுஷ்டித்து அறுமுகனின் திருவருளுக்குப் பாத்திரமாகலாம். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பாடல்களை ஒருமனதுடன் ஓதினாலே போதும்.

'கொக்கரக்கோ' என்று கூவும் சேவலைக் கொடியாக உடையவன் முருகன். மயில் அவனது வாகனம். சூரபன்மன் சாகாவரம் பெற்றவன். மாமரமாகிய மமதையோடு மடியாமல் சேவலும் மயிலுமாக மாறி கந்தப்பெருமானைத் தாங்கினான். இந்தப் பெரும்பேறு யாருக்குக்கிடைக்கும். அவன் அடியவர்களாகிய நாம் விரதம் எப்போது முடியும் என்று காத்திருந்து முருகனின் நாமத்தை உச்சரிக்கும் சேவலை வயிற்றில் அடக்க நினைக்கின்றோமே; இது எத்தனை கொடிது! கொக்கு என்றால் மாமரம்; அறு அன்றால் வெட்டிய; கோ என்றால் தலைவன். கொக்கரக்கோ என்று கூவும் சேவல் முருக நாமத்தை விடாது சொல்லுகின்ற ஒரு பறவை என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும். ஆகவே, கந்த சஷ்டி விரதத்தை புனிதமாக அனுட்டித்து கந்தபுராணம் - சூரபன்மன் வதைப்படலம் புராணபடனம் கேட்டும், படித்தும் இறை தியானத்துடன் இருந்து உபவாசம் இருத்தலேதக்கது.

*விழிக்குத் துணை திருமென்*
*மலர்ப்பாதங்கள்*
*மெய்ம்மை குன்றா*
*மொழிக்குத் துணை முருகா*
*வெனும் நாமங்கள்*
*முன்பு செய்த*
*பழிக்குத் துணை அவன் பன்*
*னிரு தோளும்*
*பயந்த தனி*
*வழிக்குத் துணை வடிவேலுஞ்*
*செங்கோடன் மயூரமுமே.*

- என்றபடி முருகனின் நாமத்தை முறையாக உச்சரித்து ஆணவத்தை அகற்றி ஆன்மீகத்தை நிலை நிறுத்தி நாமும் கந்தப்பெருமானின் கழலிணைப் பணிந்து ஆன்ம ஈடேற்றம் அடைவோமாக. ☆

# அறிவித்தல்

**பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை,** ஊழியர்களின் வழங்கப்படாதிருக்கும் 2001ஆம் ஆண்டிற்கான சம்பளம் தொடர்பாக கௌரவ அமைச்சர் K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்களை E.P.D.P. யாழ். அலுவலகத்தில் இன்று 16-11-2001 காலை 10.30 மணியளவில் சந்தித்துக் கலந்துரையாட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சகல ஊழியர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

(94555) க.நாகமுத்து (லிகிதர்)


## கட்சிக்'கட்அவுட'மாயம்!

பண்டத்தரிப்புச் சந்திக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த அரசியல் கட்சி ஒன்றின் சின்னம் பொறிக்கப்பட்ட 'கட்அவுட்' நேற்று இரவு மாயமாய் மறைந்துவிட்டது.

இதேவேளை - சண்டிலிப்பாய் தொட்டிலடிச் சந்தியில் கட்டப்பட்டிருந்த தேர்தல் சின்னம் பொறிக்கப்பட்ட 'கட்அவுட்' ஒன்று இவ்வாரம் இனந் தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. (க-135)


# 275ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 28 - 05 - 1937



உதிர்வு 15 - 02 - 2001

**அமரர் Dr. கந்தையா பாலசிங்கம் (R.M.O.)**

நல்லூரான் அருள் வேண்டி
சென்ற ஆண்டு இந்நாளில்
எல்லையில்லா உவகையுற்று
உங்களுடன் நாம் ஒளிர்ந்தோம்!
இன்றிந்த நாள்களிலே ஒளியிழந்தோம்.
*எங்களுக்கு ஒளி தந்த சூரியன் நீங்கள்*
*மறைந்துவிட வாடியுள்ளோம்.*

(94554)

*பிரசன்னா வைத்திய நிலையம்,*
*15, பேரின்பநாயகம் லேன்,*
*கச்சேரியடி, யாழ்ப்பாணம்.*

பசுமையான நினைவுகளுடன்
**மனைவி, பிள்ளைகள்.**



# பருத்தித்துறை நகராட்சி மன்றம்
# மீள் கேள்வி அறிவித்தல்

**2002.01.01** தொடக்கம் **2002.12.31**வரையான காலப்பகுதிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் கேள்விகள் **2001.11.22**ஆம் திகதி நண்பகல் **12.30** மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். **2001.11.20**ஆம் திகதி பிற்பகல் **3.30** மணி வரை கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

## அட்டவணை

| கேள்வி விவரம் | நிர்ணயித்த தொகை | மீளளிக்கப் படக்கூடிய பிணைப்பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | ப.சே. வரி |
|---|---|---|---|---|
| 1. மரக்கறிச் சந்தை (கடைகள் நீங்கலாக) | 300,000.00 | 3,000.00 | 250.00 | 31.25 |
| 2. மிதிவண்டி பாதுகாப்பு நிலையம் | 110,000.00 | 1,150.00 | 250.00 | 31.25 |

தமது கேள்வித் தொகையின் **12.5%** தொகை பண்டங்கள் சேவைகள் வரியாக மேலதிகமாகச் செலுத்தப்படல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**ச.அன்ரன் கிறைசிஸ்**
*செயலாளர்,*
*நகராட்சி மன்றம், பருத்தித்துறை.*

**அ.வின்சன் கெனடி**, ஜே.பி.யு.எம்.
*தலைவர்,*
*நகராட்சி மன்றம், பருத்தித்துறை.*

***நகராட்சிமன்ற அலுவலகம்,***
***பருத்தித்துறை.***
2001.11.12

(C/19313)



# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை சந்திரசேகரம்

கொழும்புத்துறையைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சந்திரசேகரம் (10.11.2001) சனிக்கிழமை அன்று ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

இவர் ஐயம்பிள்ளை - புவனேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், மேரிசந்திராவின் அன்புக் கணவரும், அன்ரனிருபன், யேசுதாசன், அன்ரன் சந்திரகுமார், மன்பிரட், யெனிபா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலம்சென்ற அருளப்பு ராசையா - எலிசபேத் தம்பதியினரின் மருமகனும், யேசுதாசன், மரியதாசன், பேக்மன் (ஸ்ரீலங்கா ரெலிக்கொம் - யாழ்ப்பாணம்), சூசைதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-11-2001) வெள்ளிக் கிழமை காலை 9.00 மணியளவில் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பேக்மன் ஜெயராசா
(மைத்துனர்)

*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(94551)



# பொதுத் தேர்தல் - 2001 யாழ்.மாவட்டம்
# தமிழர் விடுதலைக் கூட்டணி







**அன்பார்ந்த தமிழ் மக்களே!**

**தமிழர் தம் ஒற்றுமை அணியாம், ஓரணியாம்**

- **உடனடி யுத்த நிறுத்தம்.**
- **தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கப்பட்டு, நோர்வே மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை.**
- **பொருளாதார, மீன்பிடி தடைகள் நீக்கம்.**
- **தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.**

*என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தத் தேர்தலில் போட்டியிடும் தமிழர் தம் கூட்டமைப்புக்கு உங்கள் ஆதரவை வழங்குவீர்!*
*தமிழர் தம் உரிமைப் போராட்டத்துக்கு ஜனநாயக ரீதியான உந்துசக்தியாக ஆதரவு தாரீர்.*

**தமிழர் விடுதலைக் கூட்டணி** X

உங்கள் விருப்பு வாக்கின் ஒன்றை வெற்றி இலக்கம் 9இற்கு அளித்திடுவீர். "உண்மை. நேர்மை. இலட்சியத்திற்கான அயராத உழைப்பு"

# நடராஜா இரவிராஜ் வேட்பாளர் இலக்கம் 9

(93915)

# பிரசாரப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுவரும்

# 400 அரச வாகனங்களையும் பறிமுதல் செய்க!

## பொலீஸ் மா அதிபரிடம் தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

கொழும்பு, நவ. 16

தேர்தல் பிரசாரங்களுக்காக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர் பயன்படுத்தி வரும் 400 இற்கும் மேற்பட்ட அரச வாகனங்களை உடனடியாகப் பறிமுதல் செய்யுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க பொலீஸ் மா அதிபரைக் கேட்டுள்ளார்.

தேர்தல் சட்டத்திற்கமைய தேர்தல் பிரசாரங்கள் மற்றும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் அரச உடைமைகளும் சொத்துக்களும் பயன்படுத்தப்படக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும் ஆளும் தரப்பினர் இதனையும் மீறி அரச வளங்களைத் தங்கள் பிரசார நடவடிக்கைகாகத் தாராளமாகப் பயன்படுத்தி வருவதாகத் தேர்தல் ஆணையாளருக்கு எதிர்க்கட்சிகள் ஆதாரங்களுடன் குற்றஞ்சாட்டி இருந்தன.

தேர்தல் நடவடிக்கைக்காக அரச தரப்பினரால் பயன்படுத்தப்படும் அரச வாகனங்கள் குறித்த பூரண விவரங்களை ஐ.தே.கவினர் எழுத்து மூலமாகவும் தேர்தல் ஆணையாளருக்குக் கடந்த வாரம் சமர்ப்பித்திருந்தனர்.

இதில் தேசிய லொத்தர் சபையின் பெருமளவு வாகனங்களும் இலங்கை மின்சார சபையின் பெருமளவு வாகனங்களும், சதொச வாகனங்கள் பலவும் மற்றும் பல அமைச்சுக்கள், திணைக்களங்களின் வாகனங்களும் அடங்கும் எனவும் தேர்தல் ஆணையாளருக்குச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது

ஏற்கனவே இது குறித்து எச்சரித்திருந்த தேர்தல் ஆணையாளர் அரச வாகனங்களை எந்தக் கட்சியும் பயன்படுத்தக்கூடாது எனவும், சம்பந்தப்பட்ட கட்சித் தலைமைப்பீடங்களிடம் தெரிவித்திருந்தார்.

இதனையும் மீறி அரச வாகனங்கள் தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதையடுத்தே அவற்றை உடனடியாகப் பறிமுதல் செய்யுமாறு தேர்தல் ஆணையாளர் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (க)

## சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று

யாழ்ப்பாணம், நவ 16

யாழ். பல்கலைக்கழக அனுசரணையுடன் நடத்தப்பட்ட யாழ். மத்திய கல்லூரி முறைசாராக் கல்விப்பிரிவு மாணவர்களுக்கான நூலகவியல் பயிற்சி நிறைவையொட்டி சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 30 மணிக்கு தலைவர் வை. சிவரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். (க-ரி)

துப்பாக்கி ரவைகள் மோசடிச் சம்பவம்

## கடற்படைத் தளபதியின் செயலாளர் பதவி நீக்கம்

கொழும்பு, நவ. 16

கடற்படைத் தளபதியின் செயலாளர் ஒருவர் துப்பாக்கி ரவைகளை மோசடி செய்தது தொடர்பாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடற்படையின் ஆயுதக் களஞ்சியச்சாலையிலிருந்து இரு தடவைகள் பெருமளவு கைத்துப்பாக்கி ரவைகளை சட்ட விரோதமான முறையில் எடுத்துச் சென்றது தொடர்பாகவே இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதக் களஞ்சியசாலையின் காப்பாளருக்குத் தெரியாமல் இந்த ரவைகள் கையாடப்பட்டது அண்மையில் அங்கு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் போது தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து நடைபெற்ற விரிவான விசாரணையின் மூலம், கடற்படைத் தளபதியின் பிரத்தியேகச் செயலாளராகக் கடமையாற்றிய கடற்படை அதிகாரி ஒருவர் இதில் சம்பந்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கையாடப்பட்ட துப்பாக்கி ரவைகள் அரசியல்வாதி ஒருவரின் தேவைக்கு வழங்கப்படவிருந்ததாகவும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. (க)

## பாராட்டு விழா

வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 159 மாணவர்களைப் பாராட்டும் விழா ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு வட. இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம்பர்சிட்டி ஞானியார் கல்விக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த விழாவில் வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் க. கமலானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் ப. வேலாயுதம்பிள்ளை, எம். எஸ். எவ். அமைப்பின் இணைப்பாளர் பிஜே பஸ்கேல் ஆகியோர் கலந்துகொள்வர். (க-7-ரி)

ஆடு, மாடுகளின் தோல், கழிவுகளால்

## கொக்குவில் இந்து மயான சூழல் மக்கள் பெரும் அசௌகரியம்

யாழ்ப்பாணம், நவ. 16

இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடு, மாடுகளின் தோல்கள், எலும்புகள் மற்றும் கழிவுப் பொருள்களைக் கொக்குவில் இந்து மயான பகுதியில் இறைச்சி வியாபாரிகள் வீசி வருவதால் சுற்றாடல் பகுதி பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த சில தினங்களாக அந்த பகுதியில் வீசப்பட்ட கழிவுகளைக் கட்டாக்காலி நாய்கள் இழுத்துவந்து வீதியில் போட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இந்த வீதியால் பயணம் செய்யும் மாணவர்களும் பொதுமக்களும், கைக் குட்டையால் மூக்கைப் பொத்தியவாறு செல்கின்றனர்.

குடிமனைகள் அதிகம் உள்ள இந்தப் பிரதேசத்தில் இத்தகைய செயல்களால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் சூழல் மாசடைந்து வருகிறது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-6)

பொலீஸாரின் சோதனைச் சாவடியில்

## 'பஜிரோ'வில் எடுத்துச் சென்ற வாக்குப்பெட்டி சிக்கியது!

காலி, நவ. 16

காலி மாவட்டத் தேர்தல் பணிமனைக்குச் சொந்தமான 'பஜிரோ' வாகனத்தில் நள்ளிரவில் கொண்டு செல்லப்பட்ட வாக்குப்பெட்டியை ஹிங்கொட பாலத்தடியில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் பணியாற்றிய பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

வாக்குப் பெட்டியில் 0708054 என்ற இலக்கம் பொறிக்கப்பட்டிருந்தது என்றும் வாக்குப் பெட்டி கைப்பற்றப்பட்ட வேளையில் வாகனத்தில் சாரதி மாத்திரமே இருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து பொலீஸார் காலி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டபோது சாரதி மதுபோதையில்இருந்தபடியால் அவ்வாறு வாக்குப் பெட்டியைக் கொண்டு சென்றிருக்கலாம் எனக் கூறப்பட்டது.

எனினும் பொலீஸார் சாரதியை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய போது சாரதி மதுபோதையில் இருக்கவில்லை என மருத்துவ அறிக்கை தெரிவித்தது. (க)

திருகோணமலை மாவட்ட

## ஆஸ்பத்திரி ஊழியர்களின் உண்ணாவிரதப் போர் முடிவு

திருகோணமலை, நவ. 16

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் எட்டு வருடங்களாக பதிலீட்டு தொழிலாளர்களாக பணிபுரிந்தவர்கள் தம்மை நிரந்தரப்படுத்தும்படி கடந்த மூன்று தினங்களாக திருகோணமலை தள வைத்தியசாலையின் முன்பாக மேற்கொண்டு வந்த சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளது.

இவர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்கும்படி வட.-கிழக்கு மாகாண ஆளுநர், மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் க. பரமலிங்கத்திடம் பணித்துள்ளார்.

இதனையடுத்து29-10-2001 ஆம் திகதி வெளியான சுற்றறிக்கையின் பிரகாரம் 180 நாள்கள் தொடர்ச்சியாகக் கடமையாற்றியவர்களுக்கு நியமனங்களை வழங்கும்படி மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரை செயலாளர் பணித்துள்ளார்.

இந்த அறிவிப்பை அடுத்து உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. தங்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய சகல தரப்புக்கும் உண்ணாவிரதிகள் நன்றி தெரிவித்துள்ளனர். (க-145)

## விடைத்தாள் மதிப்பிடும் பணி

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட தரம் 9 மாணவர்களின் ஊித பாடத்துக்கான விடைத்தாள் மதிப்பீடு வலயக் கல்வி அலுவலகத்திலும்—

ஏனைய பாடங்களுக்கான மதிப்பீட்டுப்பணிகள் முன்னர் அறிவிக்கப்பட்டதன்படி யாழ். இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றிலும் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-7)

## தேர்தல் பிரசாரம் தீவிரம்

சண்டிலிப்பாய், நவ. 16

வலி. மேற்கு, வலி. தென்மேற்கு பிரதேசங்களில் பொதுத் தேர்தல் பிரசாரம் தீவிரமடைந்து வருகின்றது. முக்கிய சந்திகள் எங்கும் கட்சிகளின் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. ஐ. தே. கட்சியின் பச்சை நிறக்கொடிகளும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொடிகளும், ஈ. பி. டி. பி. கட்சியின் கொடிகளும் வீதிகளுக்குக் குறுக்காக கட்டப்பட்டுள்ளன. அத்துடன் கட்சிச் சின்னம் பொறித்த பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன.

இதேவேளை — வீதி ஓரங்களில் மதில்கள், கட்டடங்கள் ஆகியவற்றில் பெரிய சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருக்கின்றன. வீட்டு மதில்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பது குறித்து மக்களில் பலர் அதிருப்தி தெரிவித்தனர். (க-135)

## வட-கிழக்கு அபிவிருத்தித்திட்டம்; ஆளுநரால் அங்குரார்ப்பணம்

திருகோணமலை, நவ. 16

வடக்கு — கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட ஆரம்பப் பட்டறையை வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜயவர்த்தன சனிக்கிழமையன்று ஆரம்பித்து வைத்தார்.

இன மோதல்களால் சீரழிந்து போயுள்ள வடக்கு—கிழக்கு மாகாணத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் முகமாக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜிரிஇசற். ஒபெக், நெதர்லாந்து அரசு மற்றும் இலங்கை அரசு ஆகியவற்றின் நிதி வழங்கலில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென வடக்கு — கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எதிர்வரும் 5 வருடங்களில் செலவிடப்படவுள்ளது.

முதலில் திருகோணமலை, அம்பாறை, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். பின்னர் ஏனைய மூன்று மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கான 40 மில்லியன் அமெரிக்க டொலர்களில் 62 வீதமான நிதி ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் இத்திட்டத்தின் பிரதான முகாமைத்துவ அலகிற்கான காரியாலயம் அமைக்கப்பட்டுள்ளது. திட்டப்பணிப்பாளராக இலங்கை நிருவாக சேவையின் சிரேஷ்ட அதிகாரி தம்பையா இலங்காநேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

எட்டு மாவட்டங்களிலும் திட்ட அலுவலகங்கள் செயற்படும். இவற்றிக்கு பிரதித் திட்டப் பணிப்பாளர்கள் பொறுப்பாக இருப்பர். (க)

## தேர்தலில் அரச உடைமைகளின் பயன்பாட்டைக் கண்டறியக் குழு

கொழும்பு, நவ. 16

பொதுத் தேர்தலின்போது 27 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு முரண்படும் விதத்தில் அரச உடைமைகள் பயன்படுத்தப்படுவதைக் கண்டறியச் சுதந்திர ஊடகவியலாளரின் முயற்சியால் மூவர் கொண்ட சுயாதீன ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்களான ரஞ்சித் தீரரத்ன மற்றும் ரி. சுந்தரலிங்கம், ஓய்வுபெற்ற வெளிவிவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் கே. கொடகேஆகியோர் அடங்கியுள்ளனர்.

அரச உடைமைகளைப் பயன்படுத்துதலைக் கண்டறிதல் தேர்தல் ஆணையாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல், சட்டவிரோதச் செயற்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறியத் தந்து சட்டத்தை மதியாதோர் மீது நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியனவே இந்த ஆணைக்குழுவின் நோக்கங்கள் ஆகும்.

இந்த ஆணைக்குழுவுக்கு சட்டத்தரணிகளின் சங்கம் ஒத்துழைப்பை வழங்கவுள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்த முறைப்பாடுகளை 075-36977, 075-36978 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கட்பட்டுள்ளது. (க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஒரு காதலின் கதை

யாழ்.சேவையில் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் பரிசுபெற்ற "கல்வியா? கனடா கல்யாணமா" நாடகத்தைக் கேட்டீர்களா? அவரது பரிசு பெற்ற நாவல் ஒரு காதலின் கதை. 182 பக்கங்கள். (94487)

## தொடர்பு கொள்ளவும்

கடந்த 07.11.2001 அன்று திருமலையிலிருந்து யாழ்.வந்த சிற்றி ஒவ் றிங்கோ பயணிகள் கப்பலில் பயணப் பொதியினை தவறவிட்டவர்கள் ஆதாரத்துடன் இராமநாதன் நுண்கலைக்கழக பெண்கள் விடுதி, மருதனார்மடம், யாழ்.பல்கலைக்கழகம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (94534)

## தவறிவிட்டது

டான்போத் இல்லம், டச் றோட் உடுவிலைச் சேர்ந்த அரியரத்தினம் பாலச்சந்திரன் என்பவரின் தேசிய அ.அட்டை (இல.391313008V), விசேட அ.அட்டை (இல.0906014997)என்பன மக்கள் வங்கிக்கும் பிரதான வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (94552)

## தவறிவிட்டது

13.11.2001 மாலை பண்டத்தரிப்பு, கானயலடி கஜன் ஸ்ரோர்ஸ் அருகில் சிதம்பரம் விலாசமிட்ட மூக்குக் கண்ணாடி கூட்டோடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.465/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (94545)

மண்டைதீவு, 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராஜரட்ணம் பரதன் என்பருடைய தேசிய அ.அ. (இல.713421154V), வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப் பத்திரம், வாகனக் காப்புறுதி, வரிப் பத்திரம் என்பன சத்திரத்துச் சந்திக்கும் சிவன் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பிரகாஸ் ஏஜென்ஸ், இல.457, K.K.S. வீதி, யாழ். என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (94543)

## குத்தகைக்கு விடப்படும்

உடுவில், மானிப்பாய் வீதியில் முதலாம் கட்டையடியில் 18 பரப்பு காணியுடன் விஸ்தீரணமான வீடு ஒன்று குத்தகைக்கு உண்டு. தொடர்பு: டான் போத் இல்லம், டச் றோட், உடுவில். (94553)

## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

நாளை 17.11.2001 புகைப்படச் சுருள்களும், வீடியோ கசற்றுகளும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

புலோலி 070-212720 (94561) நல்லூர் 021-2604

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் மார்க்கண்டு தவராசா

எமது சக ஊழியர் மார்க்கண்டு தவராசா அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*சாந்தி! சாந்தி! சாந்தி!*

*தபாலகம், யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
**யாழ்.பிரதம தபாலக ஊழிய நண்பர்கள்.** (94559)

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை பாவிக்கப்பட்ட பொருள்களை விற்பதற்கான

# கூறுவிலை கோரல்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் பாவிக்கப்பட்ட கீழ்க்காணும் பொருள்கள் விற்பதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. இப் பொருள்களை வாங்கவிரும்புவோர் பொருள் ஒன்றிற்கான கூறுவிலையை குறிப்பிட்டு 29.11.2001ஆம் திகதிக்கு முன்பு கிடைக்ககூடியதாக பதிவுத தபாலில் 'மாவட்ட முகாமையாளர், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். அனுப்பப்படும் தபாலின் இடதுபக்க மூலையில் "கூறு விலைகோரல் விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

கூடிய விலையைக் கோரும் விண்ணப்பதாரிக்கே பொருள்கள் விற்கப்படுவதுடன், விற்பதற்கான விலையினை நிர்ணயிக்கும் உரிமை எமது அலுவலக விற்பனை விலையை நிர்ணயிக்கும் குழுவிற்கே உரியது.

வாங்கப்படும் பொருள்கள் அறிவித்தல் கிடைத்து 10 நாள்களுக்குள் முழுப்பெறுமதியையும் செலுத்தி களஞ்சியத்திலிருந்து கொண்டுசெல்லப்படல் வேண்டும். பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் 19,20,21,22 ஆகிய நான்கு தினங்களில் காலை 9.30 மணியிலிருந்து 11 மணிவரையும், மாலை 2.00 மணியிலிருந்து 3.30 மணிவரையும் பார்வையிடலாம். கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் 29.11.2001ஆம் திகதி பிற்பகல் 14.30 மணியளவில் விற்பனை விலையைத்தீர்மானிக்கும் குழுவால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அத்தினத்தில் விண்ணப்பதாரிகள் சமுகமளிக்கலாம்.

பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் குறிப்பிட்ட பொருளின் முழு எண்ணிக்கையையும் பெறுபவராக இருக்க வேண்டும்.

| பொருள்களின் விவரம் | | தொகை விவரம் |
|---|---|---|
| அலுமாரி இரும்பு | - | 02 |
| கபினற் இரும்பு 4அறைகள் | - | 01 |
| இரும்புப் பெட்டகம் | - | 01 |
| தட்டச்சு இயந்திரம் தமிழ் | - | 01 |
| தட்டச்சு இயந்திரம் ஆங்கிலம | - | 01 |
| பிளைவூட் கதவு 2'9" x 6'9" | - | 12 |
| பிளைவூட் கதவு 3'6" x 6'9" | - | 01 |
| அஸ்பெஸ்ரோஸ் சீற் 8' 0" | - | 26 |

**சு.மாசிலாமணி**
மாவட்ட முகாமையாளர், தே.வீ.அ.அ.சபை, மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம். (94557)

# பொதுத் தேர்தல் - 2001

## தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

நல்லவன், நாவலன், மக்களின் காவலன்
தலை வணங்காத் தமிழன்,
நிலைமாறாத தலைவன்
கொள்கை வழி செல்வோம்; கொடுமை ஒழிய உழைப்போம்.



தியாக மாமனிதர் குமார்



### திரு.அ.விநாயகமூர்த்தி

*எல்.எல்.பி. இலங்கை சட்டத்தரணி*
*தமிழ்க் காங்கிரஸ் தலைவர்.*

**1**

அகலட்டும் அடிமை வாழ்வு



### திரு.சி.வீ.கே.சிவஞானம்

*பட்டயச் செயலாளர்*
*யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்.*

**5**

பிறக்கட்டும் பூரண சுதந்திரம்



### திரு.கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்

*எல்.எல்.பி. (சிறப்பு) லண்டன்*
*பரிஸ்ரர் (லிங்கன்ஸ் இன்) லண்டன்*
*சட்டத்தரணி இலங்கை.*

**8**

படித்தவர்களை, பட்டம் பெற்றவர்களை நாடாளுமன்றம் அனுப்புவோம்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி X

எங்கள் விருப்பு வாக்குகள் மூன்றும் தமிழ்க் காங்கிரஸிற்கே.
வாழ்க தமிழ்த் தேசியம்.

~~1~~ 2 3 4 ~~5~~ 6 7 ~~8~~ 9 10 11 12

- வட்டுக்கோட்டைவாழ் மக்கள். (93913)

# நாடாளுமன்றப் பொதுத்தேர்தல்-2001

## யாழ்.மாவட்டம்


## முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்

## ஞானசுந்தரம் ஆனந்தகுமார்

✪ தேர்தல் கால அரசியல் வியாபாரம் நடத்துவதல்ல எமது நோக்கம். எமது மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொய்ப் பிரசாரம் செய்யும் பச்சோந்திகளுக்கெதிராக எமது குரலை நாடாளுமன்றத்தில் டிசெம்பர் 5ஆம் திகதிக்குப் பின் ஒலிக்கச் செய்வோம்.



**எமது தாய் மண்ணில் இருந்தே நாடாளுமன்றம் சென்று என் பணி தொடர்வேன்.**






(C/19314)

# காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம்,நவ.16

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் புதிய அணி இவ்வாரம் யாழ்ப்பாணம் வந்துள்ளது.

விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் அதிகாரி பி.சந்திரசேன தலைமையில் யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு வந்திருக்கும் இந்தக் குழுவினர் தமது முதற்கட்ட விசாரணைகளுக்காக 12 பேரின் உறவினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

காணாமற்போனோரின் விவரம், அவர்களின் கோவை இலக்கம், அவர்கள் தொடர்பான விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டோரின் விவரம் என்பன முறையே வருமாறு:

★ சுப்பிரமணியம் முகுந்தகுமார் (கோவை இல.பி.106) - 16, பலாலி வீதி, யாழ்ப்பாணம்; எஸ்.பொன்னுத்துரை, 16/34, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (சாட்சி).

★ பாலசுந்தரக்குருக்கள் கணேசலிங்கம் (கோவை இல.பி.ஜ.241) பிள்ளையார் கோயிலடி, மீசாலை கிழக்கு; 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் மந்துவிலில் உள்ள பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் (சாட்சி).

★ அருணன் செல்வரத்தினம் (கோவை இல.பி.81) - பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு; தம்பிப்பிள்ளை செல்வரத்தினம் (சாட்சி).

★ சின்னத்தம்பி ஞானேந்திரன் (கோவை இல.பி.83) - எழுதுமட்டுவாழ்; இவர் தொடர்பான விசாரணைகளுக்காக இப்பகுதி கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்.

★ இளையதம்பி கேசவன் (கோவை இல.பி.ஜ.177) - மீசாலை மேற்கு; இவர் தொடர்பான விசாரணைக்காக ஜே.240 இலக்க கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்.

★ பூலோகசிங்கம் செல்வநேசன் (கோவை இல.பி.ஜ.237) - கண்ணபுரம் மேற்கு, யாழ்ப்பாணம்; பி.மஞ்சுளா, அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம் மற்றும் ஜே.84 இலக்க கிராம அலுவலர் (சாட்சிகள்).

★ கணேஷ் ரமேஷ் (கோவை இல.பி.121) - கைதடி, நாவற்குழி; இளையப்பா சபானந்தன், ஜே.297 கிராம அலுவலர் (சாட்சி).

★ இராசையா பாலசுப்பிரமணியம் (கோவை இல.பி.ஜ.244) - வட்டுக்கோட்டை கிழக்கு, சங்கரத்தை; இவர் தொடர்பான விசாரணைக்காக இப்பகுதி கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்.

★ கந்தையா சிறீதரன் (கோவை இல.பி.ஜ.73) - மிருசுவில், சாவகச்சேரி; இரத்தினம் கணேசமூர்த்தி, முகமாலை, எழுதுமட்டுவாழ் மற்றும் அன்னலட்சுமி, பொன்னம்பலம் வீதி, அரியாலை (சாட்சிகள்).

★ தர்மலிங்கம் புவனேந்திரன் (கோவை இல.பி.94) - கச்சாய் வீதி, கொடிகாமம்; பரமானந்தன நல்லதம்பி (சாட்சி).

★ சின்னட்டி கோபாலகிருஷ்ணன் (கோவை இல.பி.77) - கைதடி மேற்கு; இவர் தொடர்பான விசாரணைக்காக இவரது உறவினர்கள் அழைக்கப்படுகின்றனர்.

★ பூபதி அரவிந்தன் (கோவை இல.பி.ஜ.9/61) - சிங்கராயா வயல், கட்டைப்பிராய்; பூபதி ஜெகதீஸ்வரி (சாட்சி). (உ-4)

## பொலீஸ் அதிகாரி தாக்கப்பட்டார்

கண்டி மாவட்டத்தில் அசலக்க பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்றுக்காலை இனந்தெரியாத குழு ஒன்றினால் தாக்கப்பட்டார்.

கடந்த செவ்வாயன்று அங்கு ஐ.தே.கட்சியின் பிரசாரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்துக்கு சமீபமாகச் சிலர் ரயர் போட்டு எரித்தனர். சம்பந்தப்பட்ட பொலீஸ் பொறுப்பதிகாரி பின்னர் அவற்றை அப்புறப்படுத்தியிருந்தார்.

அவரின் நடவடிக்கையை கண்டித்து அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதன் பின்னரே பொலீஸ் பொறுப்பதிகாரி தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் -

அமைதியை நிலைநாட்ட கண்டியிலிருந்து மேலதிக பொலீஸார் அங்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (உ)

## இலவச சீருடை, புத்தகம் விநியோகம்

நாடு முழுதும் உள்ள பாடசாலை மாணவர்க்கான - அடுத்த ஆண்டுக்குரிய - இலவச பாடநூல்களும், இலவச சீருடைகளும் இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்பு வழங்கப்படவுள்ளதாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)


### மனித உரிமைகள் தினத்தை முன்னிட்ட
### அகில இலங்கை கட்டுரைப் போட்டி

மார்கழி மாதம் 10ஆம் திகதி உலக மனித உரிமைகள் தினமாகும். இது சம்பந்தமாக நடத்தப்பட இருக்கும் கட்டுரைப் போட்டியில் கலந்துகொள்ளுமாறு க.பொ.த. சாதாரண தர/உயர்தர வகுப்பு மாணவர்களை கர்த்தாஸ் இலங்கை செடெக் நிறுவனம் அழைக்கிறது. இப்போட்டி ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடத்தப்படும். வெற்றி பெறுவோருக்குப் பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

1. முதற்பரிசு - ரூபா 5,000.00 சான்றிதழ்
2. இரண்டாம் பரிசு - ரூபா 3,000.00 சான்றிதழ்
3. மூன்றாம் பரிசு - ரூபா 1,000.00 சான்றிதழ்

இதையடுத்து வரும் 10 சிறந்த கட்டுரைகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

போட்டி விவரங்கள்:

☆ தலைப்பு - "வாழும் உரிமையை நிலை நாட்டுதல்"
☆ தகுதி - க.பொ.த. சாதாரணதர/உயர்தர மாணவர்கள்.
☆ சொற்கள் - 1,500இற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

☆ சகல கட்டுரைகளும் தெளிவான கையெழுத்தில் ஏ-4 தாளில் எழுதப்பட்ட பின்னர், மாணவரின் பெயர், பிறந்த திகதி, வகுப்பு ஆகிய விவரங்களோடு கட்டுரை மாணவரின் சொந்த முயற்சி எனவும் பாடசாலை அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். (94565)

அனுப்ப வேண்டிய முகவரி:
மனித உரிமைகள் இணைப்பதிகாரி (இயக்குநர் ஊடாக)
கர்த்தாஸ் இலங்கை - செடெக்,
133 கின்சி வீதி, கொழும்பு - 08.

இயக்குநர்
மனித முன்னேற்ற நிலையம்,
மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

போட்டி முடிவு திகதி: 25.11.2001

### துயர் பகிர்கின்றோம்

பலாலி ஆசிரிய கலாசாலையின்
கிறிஸ்தவ மாணவர் மன்ற காப்பாளரும் விரிவுரையாளருமாகிய
திரு. திருஞானம் குயின்ரஸ்
அவர்களின் அன்பு மாமனார்

வேதநாயகம் பீற்றர் தேவதாஸ்

(கணக்காளர், நவீல்ட் பாடசாலை - கைதடி)

அவர்கள் 14.11.2001இல் காலமாகிய செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்த நாம், அவரது பிரிவால் துயறுரும் அவருடைய குடும்பத்தாரின் துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆன்மா விண்ணக ஈடேற்றம் அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

கிறிஸ்தவ மாணவர் மன்றம்.
பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி. (94568)

STP Computer World (Pvt.) Ltd.
அனுசரணையுடன்

### கம்ப்யூட்டர் ருடே நடத்தும்
### கணனிப் பொதுப்பரீட்சை - 2001

பலரது வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணத்திலும் பரீட்சை நிலையம்

கம்ப்யூட்டர் ருடே தேசிய ரீதியில் நடத்தவிருக்கும் எழுத்துமூல கணனிப் பொதுப் பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெற உள்ளது. மேலதிக விபரங்கள் ஒக்டோபர் மாத இதழில்.

விண்ணப்பப்படிவத்திற்கும், பதிவுகளுக்கும்:
ம.அருள்குமரன்
பரீட்சை இணைப்பாளர் (யாழ்ப்பாணம்)
STP Computer World (Pvt.) Ltd.
54 A, Palaly Road, Kantharmadam
Jaffna.



### கம்ப்யூட்டர் ருடே

இலங்கையின் முதலாவது தமிழ் தேசிய கணனிச் சஞ்சிகை

அனைத்துப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் (94537)

### ராஜா யாழ்ப்பாணம்

சரத்குமார், சுகன்யா, கவுண்டமணி மற்றும் பலர் நடித்த

இளவரசன்

தினசரி: 10.30, 2.30, (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2.5 (புதிய நேரம்)

அடுத்த வெளியீடு

ஆளவந்தான் (C/19317)

### நிறைஞ்சனாஸ் சங்கானை

குணால், மோனல், கரண் நடித்த

பார்வை ஒன்றே போதுமே

(ரீலஸ்)

தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C/19298)

### நாகம்ஸ் சுன்னாகம்

ஷியாம், ஜோதிகா, சிம்ரன் நடித்த

12-B (ரீலஸ்)

சென்றமாதம் இந்தியாவில் வெளியான திரைக்காவியம்.

காட்சிகள்:- 11.00, 2.30 (புதிய நேரம்) (94562)

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தினால்
14.11.2001இல் நடத்தப்பட்ட

### அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு

பரிசு பெறும் இலக்கங்கள்:-

முதலாம் பரிசு - இல.2421
இரண்டாம் பரிசு - இல.2172
மூன்றாம் பரிசு - இல.1770

மற்றும் ஐந்து ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்:-

1519, 1706, 818, 298, 1456

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். - நிர்வாகம்.

விளம்பர அன்பளிப்பு:
"வலம்புரி அழகு மாடம்"
பிரதான வீதி, வட்டுக்கோட்டை. (94563)

We Serve

உரும்பிராய் மேற்கு
கிராம அபிவிருத்திச் சங்க சார்பில்
உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும்

### இலவச மருத்துவ முகாம்

இடம் :- திருகுமரன் சனசமூக நிலையம், உரும்பிராய் மேற்கு.
காலம் :- 18.11.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 - 12.30 வரை

மேற்படி முகாமில்

☆ கண் பரிசோதனை ☆ நீரிழிவுப் பரிசோதனை
☆ பொதுவான நோய்கள் பரிசோதனை

கண் பரிசோதனை
லயன் எஸ்.எம்.பெர்னாண்டோ MJF
வைத்திய நிபுணர்களும், மருத்துவபீட மாணவர்களும் இந்தப் பரிசோதனையை நடத்துவர்.

அனைவரும் வருக! பயன் பெறுக!

லயன் V.சின்னத்துரை J.P. தலைவர். (C/19318) லயன் த.திருநாவுக்கரசு செயலாளர்.

### துயர் பகிர்கின்றோம்

எமது சக ஆசிரியர்
திருமதி இலக்குமிதேவி கந்தசாமி
அவர்களின் அன்புத் தந்தையார்

முருகேசு கணபதிப்பிள்ளை

அவர்களின் மறைவையிட்டு நாம் ஆழ்ந்த கவலை அடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்,
பருத்தித்துறை. (C/19320)

### மகாஜனக் கல்லூரிச் சமூகம்
### பாராட்டி வாழ்த்துகின்றது

✳ தரம் - 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த

1. பா.ரேகா (Dis. Rank-02) 2. க.கோகுலன் (D.R.-9)
3. பா.ரேணுகா 4. இ.கௌசா
5. சி.ரோபிதா 6. அ.ரம்யா
7. வ.அர்ச்சனா 8. யோ.கார்த்திகா
9. அ.வாசந்தி

ஆகியோரையும் -

✳ பல்கலைக்கழகத்தில்

பொறியியல்துறையில் முதலாம் பிரிவில் சித்தியெய்தி, தற்போது பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றும்
செல்வன் குகனேசன் சுந்தரவடிவேல்
அவர்களையும் -
ஏனைய பட்டம் பெற்ற மகாஜனாவின் மைந்தர்களையும் -

✳ சதுரங்கத்தில்

தேசிய மட்ட சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டிய இரு தமிழ் மாணவர்களான - எமது கல்லூரியைச் சேர்ந்த -
செல்வன் கணேசதுரை ஆதித்தன்
செல்வி சிவப்பிரியா சிவபாதரத்தினம்
ஆகியோரையும் -.

பாராட்டி வாழ்த்துவதில் மகாஜனச் சமூகம் பெருமிதம் அடைகின்றது.

யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை. - மகாஜனச் சமூகம்.

### தரம் - 6 அனுமதி

மேற்படி வகுப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
ஏனைய வகுப்புகளுக்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அதிபர்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை. (C/19322)

# சகல கட்சிகளினதும் விருப்புடனேயே வீதிக் கண்காணிப்புப் பணி ஆரம்பம்

## போக்குவரத்துப் பணியாளர்கள் சார்பில் அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தமிழ்க் கட்சிகளுடனும் கலந்துரையாடி அவர்களுடைய பெரு விருப்பத்துடன் (இன்று) வெள்ளிக்கிழமை முதல் தமது சேவையை மீள ஆரம்பிப்பதாக யாழ்.மாவட்ட வீதிப் போக்குவரத்துப் பணியாளர்கள் சார்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

"யாழ்.பிரதேச செயலகத்தின் ஊடாக அரச அதிபரின் கீழ் வீதிப் போக்குவரத்துச் சேவை முன்னெடுக்கப்படுகின்றது" - என்ற தலைப்பில், "வீதிப் போக்குவரத்துப் பிரிவுத் தொண்டர்கள் - யாழ்.மாவட்டம்" - என்று குறிப்பிட்டு நேற்று மாலை உதயனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வெள்ளிக்கிழமை தொடக்கம் எமது வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவுத் தொண்டர்கள் வீதியில் கடமையில் ஈடுபடுத்துவது தொடர்பாக -

உண்மையான நிலைமையினையும் எமது சேவையினையும் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து தமிழ்க் கட்சியுடனும் கலந்துரையாடி அவர்களுடைய பெருவிருப்பத்துடன் இச்சேவையினை நாம் ஆரம்பிக்கின்றோம்.

யாழ்.பிரதேச செயலகத்தின் கீழ் - 'றான்' தலைவரின் நியமனப் பத்திரத்துடன் - ஆரம்பிக்கப்படும் இச்சேவையினை யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துத் தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகளுடனும் மனிதநேய அமைப்புகளுடனும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமை ஆணைக்குழு போன்ற பல்வேறுபட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் ஆலோசித்து, எமது சேவை தொடர்பான மகஜரை ஒப்படைத்து, இதனூடாக இச்சேவையினை திறன்பட செய்ய விருக்கின்றோம்.

தற்போது எமது அமைப்பானது அரச திணைக்களத்தின் ஊடாக சேவை செய்கின்றதே ஒழிய, தனிப்பட்ட கட்சியுடனோ அல்லது பொலீஸாருடனோ எதுவிதமான தொடர்பும் கொள்ளவில்லை என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

எமது சேவையில் குற்றம் குறை காணப்படுமிடத்து எமக்குத் தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (உ)

### கொழும்பில் விசாரணை

கொட்டாஞ்சேனைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்த - வடபகுதியைச் - சேர்ந்த ஒன்பது இளைஞர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு பொலீஸாரால் விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர்களில் எட்டுப்பேர் திங்கள் காலை விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஒருவர் மேல் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சாகித்திய விழா இன்று கொழும்பில்

கொழும்பு,நவ.16

2001ஆம் ஆண்டுக்கான அரச சாகித்திய விழா இன்று மாலை கொழும்பு சேர் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில், பௌத்தசாசன கலாசார, சமய அலுவல்கள் பிரதி அமைச்சர் மொண்டி கோபல்லாவ தலைமையில் நடைபெறுகின்றது.

இலங்கைக் கலைக்கழகத்துடன் இணைந்து தமிழ், சிங்கள, ஆங்கில இலக்கியத் துணைக்குழுக்கள் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவை இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

இந்த விழாவில் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் தெரிவுசெய்யப்பட்ட இலக்கியகர்த்தாக்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட விருக்கின்றது. (உ)

# தேர்தல் கண்காணிப்பு குறித்து இன்று கொழும்பில் சந்திப்பு

கொழும்பு,நவ.16

இலங்கைக்கு வந்திருக்கும் ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் இன்று தேர்தல் ஆணையாளரைச் சந்திக்கவுள்ளார்.

இந்த முக்கிய சந்திப்பின்போது தேர்தல் கண்காணிப்புப் பணிகள் பற்றி கலந்துரையாடப்படலாம் என்று நம்பப்படுகிறது.

தேர்தல் கண்காணிப்புத் தொடர்பாக ஆராய இங்கிலாந்து மற்றும் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த இரு பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு வந்தனர். நதாலி ரெனஸ், ஸ்டீபன் ஆகிய இவ்விரு கண்காணிப்பாளர்களையும் வடகிழக்குப் பகுதிகளுக்கு அனுப்ப தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (உ)

### உடற்கல்வி டிப்ளோமாவுக்கு 50மாணவர் தெரிவு

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறிக்கு இவ்வாண்டு புதிதாக 50மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

புதிதாக சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளும், எழுத்துப்பரீட்சையும் முடிவுற்றுள்ளன. (உ-185)

### தற்கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் இவர்களுக்கு அண்மையில் - நெருங்கி - சென்று குண்டை வெடிக்க வைத்ததாகக் கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு புளியந்தீவில் - அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள - நடத்தப்பட்ட முதல் தற்கொலைத் தாக்குதல் இதுவாகும்.

உயிரிழந்த மூவரின் சடலங்களும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மாவட்ட நீதிபதி அப்துல் கவூர் முன்னிலையில் நடைபெற்ற மரண விசாரணைகளை அடுத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

தற்கொலையாளியின் சடலம் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த நல்லதம்பி சுரேஷ்குமார், நல்லதம்பி சுரேஷ்வரி, எஸ்.செல்லையா, இப்ராகிம் முபாரக், கே.சந்திரசேகரன், திலகேஸ்வரி, கே.தங்கவடிவேல் ஆகியோரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தற்கொலைத் தாக்குதல் நடந்த இடத்தில் ஏறாவூர் ஐயங்கேணியைச் சேர்ந்த தங்கராசா சிறிதரன் என்ற இளைஞரின் அடையாள அட்டை மீட்கப்பட்டுள்ளதாகவும் -

இவரே தற்கொலைத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாகவும் - பொலீஸார் தெரிவித்தனர். (உ-10)

## முன்னாள் உலக அழகியான

# ஐ.தே.கட்சி மகளிர் அணியின் பிரமுகருக்கு பார்சல் குண்டு!

## நேரத்துடன் வெடித்ததால் தப்பினார்

கொழும்பு,நவ.16

ஐக்கிய தேசியக் கட்சியின் மகளிர் அணியின் முக்கிய பிரமுகரும் திருமதிகளுக்கான உலக அழகிப் போட்டியில் முன்னர் வெற்றியீட்டியவரும் 'யுனிசெப்'பின் நல்லெண்ணத் தூதுவருமான றோஸி சேனநாயக்காவுக்கு நேற்று பார்ஸல் மூலம் வெடிகுண்டு ஒன்று அனுப்பப்பட்டிருக்கின்றது.

அதிர்ஷ்டவசமாக அவரது கிருலப்பனை வீட்டின் முற்புறம் உள்ள வீட்டுத் தபால் பெட்டிக்குள் - நேரகாலத்துடனேயே - அது வெடித்துவிட்டது என புலனாய்வாளர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு பொது மக்கள் ஐக்கிய முன்னணியே பொறுப்பேற்கவேண்டும் என்று ஐ.தே.கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. (உ)

# தமிழகச் சிறையில் ஈழத் தமிழர் உண்ணாவிரதப் போராட்டம்

லண்டன்,நவ.16

வெளிநாடு ஒன்றில் தனக்கு அரசியல் தஞ்சம் தருமாறு கோரி இலங்கைத் தமிழர் ஒருவர் தமிழ்நாட்டுச் சிறையில் நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

தமிழ்நாடு, செங்கல்பட்டுச் சிறையில் தனது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கிருபா செல்வகுமார் என்ற குடும்பஸ்தரே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவரின் இரண்டு பிள்ளைகளுக்கும் பாடசாலைகளில் கல்வி கற்கும் உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது.

எவ்வித வழக்குகளும் பதிவு செய்யப்படாதுள்ள இவர்களைச் சிறைக்கு வெளியே செல்வதற்கு அனுமதிக்க முடியாதெனவும் -

இந்தியாவை விட்டு வெளியேறுவதாயின் அனுமதி வழங்க முடியும் எனவும் - இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதற்கமைய அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் ஊடாக இவர்கள் நோர்வே, சுவீடன், பிரான்ஸ், சுவிஸ் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிடம் தமக்கு அரசியல் தஞ்சம் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளனர். இந்த நாடுகளும் மேற்படி அமைப்பின் ஊடாகத் தமது நாடுகளுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளன.

ஆயினும் பாதுகாப்பு அதிகாரிகள் சகிதம் அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்படக்கூட தாம் அனுமதிக்கப்படவில்லை என்றும்-

தம்மிடம் இருந்து பயண ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட அமைப்பின் அதிகாரிகள் தற்போது பாராமுகமாக இருப்பதாகவும் - அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தன்னை வருமாறு அழைப்பு விடுத்த நாடொன்றில் தனக்கு அரசியல் தஞ்சம் பெற்றுத்தருமாறு கோரியே அவர் இப்போது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

# இரு கடைக்காரர்களுக்கு தண்டப்பணம் விதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.16

சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருள்களைத் தயாரித்து, பொதுமக்களுக்கு விற்பனை செய்வதாகத் தெரிவித்து இரு வர்த்தகர்களுக்கு எதிராக யாழ்.நீதிவான் நீதிமன்றில் சுகாதாரப் பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

உரும்பிராய்ப் பகுதியில் உள்ள தேநீர்ச்சாலை மற்றும் பேக்கரி ஆகியனவற்றுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மீதான விசாரணைகள் நேற்று நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றன.

தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட பேக்கரி உரிமையாளர் ஒருவருக்கு தண்டப்பணமாக 5 ஆயிரம் ரூபாவும் தர்மப்பணமாக நவாலி மகேஸ்வரி இல்லத்துக்கு ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

மற்றொரு தேநீர்ச்சாலை உரிமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தர்மப்பணமாக புற்றுநோய்த் தடுப்பு சங்கத்துக்கு ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

அண்மைக்காலமாக குடாநாட்டில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களில் காலாவதியான பொருள்களையும், சுகாதாரமற்ற உணவுகளையும் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவது அதிகரித்து வருவதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

திடீர்ப்பரிசோதனை மூலம் வர்த்தக நிலையங்களில் உள்ள காலாவதியான உணவுப்பொருள்கள் கண்டறியப்பட்டு, அவை உடனடியாக சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளால் அழிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-6-4)

### குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டோ சாரதி அந்தப் பொதி குறித்து பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கவே, பொலீஸார் வந்து பொதியைக் கைபற்றியபோது அதில் குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாகவும் -

அது பின்னர் செயலிழக்கச் செய்ய வைக்கப்பட்டதாகவும் -

ஓட்டோ சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஓட்டோ சாரதி நாசகாரத் தடுப்புப் பிரிவில் வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருக்கும் புளியந்தீவுக்குள் குண்டுகளுடன் தற்கொலைக் குண்டுதாரி ஊடுருவியமை படை வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### மிக முக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயற்பெயர் தங்கவடிவேல் குரு.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளுக்கு எதிரான இராணுவத்தின் வெற்றிகரமான பதில் நடவடிக்கைகளை இவர்களே பெரும்பாலும் முன்னெடுத்து வந்தனர் என்றும் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அண்மைக்காலத்தில் ஊடுருவி நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல்களுக்கு இக்குழுவே பொறுப்பு என நம்பப்படுகின்றது என்றும் -

சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக சீற்றமடைந்திருந்த புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்றும் கருதப்படுகின்றது.

இவர்களுள் ரமேஷ் என்பவர் முன்னர் ஒரு தடவை புலிகள் நடத்திய தாக்குதலில் காயங்களுடன் தப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)


SPECIAL COMPUTER COURSES

START ON 18-11-2001 AT 10.00 A.M.

Certificate in Java Programming
Duration: 4 Months Fee: 2500/=

Certificate in Computer Hardware Engineering
Duration: 4 Months Fee: 3000/=

Certificate in Web Designing
(Flash, Front Page and HTML)
Duration: 3 Months Fee: 3000/=

Diploma in MS Office
Duration: 5 Months Fee: 3000/=

நவீன கணனி உலகிற்கு ஏற்ற வகையிலும் இலகுவாக வேலை வாய்ப்புக்களைத் தட்டிக் கொள்ளக்கூடிய வகையிலும் விசேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி நெறிகள் இவையாகும்.

INSTITUTE OF INFORMATICS STUDIES
100 Clock Tower Road, Jaffna
T.P No: 021-2831 Email: iis@slt



மலிவு விற்பனை

நல்லினக் குறோட்டன், சைப்பிரஸ், பாம்ஸ், சிதம்பரத்தம் கன்றுகள் சாடியுடனும், பைகளிலும் மலிவுவிலையில் விற்பனைக்கு உண்டு.

கிறீன் பாக்,
152/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.



கல்வி நிலையம்.
பௌதிகவியல்
A/L 2002
மின்னியல்
திரு.குமரன் (B.Sc.)
ஆரம்பம்:- 17-11-2001
Sat. 4.00 p.m.
(94464)



சுனில் ஆட்ஸ்

07.11.2001 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

20.11.2001 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

❖ வீடியோ கசட் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படும்

சுனில் ஆட்ஸ்
305, ஸ்ரான்லி வீதி, யாழ். (வாண் கல்வி நிலையத்திற்கு முன்பாக)

Note: 1. CD களிற்கான Print உடன் உங்கள் CD Playerஇன் கரத்திற்கமைய CDஇல் இருந்து CDஇற்கு பாடல் பதிவுசெய்து தரப்படும். 300/=

2. புத்தம்புதிய தமிழ் MP3 CDகள் விற்பனைக்கு உண்டு. (சாஜகான், பார்த்தால் பரவசம் உட்பட). (C/19319)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.